தமிழ் வாழ்க!

துணர் ௩௫. மலர் ௧௨.

தமிழ்ப் பொழில்

CONNEMARA PUBLIC LIB
24 MAR 1960

விகாரி - பங்குனி

1960

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர்:

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

தமிழ்ப் பொழில்.

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம், B. A., B. L., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்; பொழிற்றொண்டர்.

2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.

3. சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

4. வித்துவான், க. வெள்ளைவாரணனர்,
ஆராய்ச்சித்துறை, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

5. திரு. சி. வேதாசலம், B. A., B. L.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

6. திரு. வித்துவான் ச. பாலசுந்தரம்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

உள்ளுறை

துணர் ௩௰ மலர் ௧௨

		பக்கம்
1.	இளங்கோவடிகள் தமிழ்க்கழக 22-ஆம் யாண்டு விழா	353
2.	கையறவு—இ. மா. கோபாலகிருட்டினக் கோன்	356
3.	செவி யுணரா ஒலிகள்—1 ச. சம்பத்து, எம். ஏ.	357
4.	தமிழகத்தின் நெசவுத் தொழில் டாக்டர், மா. இராசமாணிக்கனர்	361
5.	சொல்லும் செயலும் வித்துவான், வி. சச்சிதானந்தம்	367
6.	தமிழில் தாவரம்—கருவிளை : செருவிளை கு. சீநிவாசன், M. SC.,	374
7.	விசயாலயன் எடுத்த துர்க்கைக் கோயில் வித்துவான், சி. கோவிந்தராசன்	377

24 MAR 1960

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௩௫	திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௧ விகாரி, பங்குனி 1960 மார்ச், ஏப்பரல்.	மலர் ௧௨

தமிழ் வாழ்க.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்களின் இளங்கோவடிகள் தமிழ்க்கழக 22-ஆம் யாண்டு

விழாவில் தலைமை தாங்கிய பேரறிஞர் அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்களின் உரைச் சுருக்கம்.

பெரியோர்களே! மாணவர்களே! கல்லூரியினைப் பேணிப் புரக்கும் இச்சங்கத்தொடு நெடுங்காலமாகத் தொடர்புடையவன் யான். என்னுடைய தமிழ்ப்பற்றிற்கு முதலாக நின்றது சங்கமாகும். மாணவனாக விருந்தபோது சங்க விழாக்களில் பங்குகொண்டு இங்கு நிகழ்த்தப்பெறும் சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கிறேன். ஒருவர் ஒன்றைப்பற்றித் தெளிவான எண்ணங்கொள்ளுவதற்கு இதுபோன்ற சங்கங்களன்றி, ஒவ்வொரு நாளும் நெருங்கிப்பழகும் ஆசிரியர்களும் முதலாவர் இச்சங்கத்தொடு நெருங்கிய தொடர்புகொண்டிருந்த பேரறிஞர் ச. சோமசுந்தர பாரதியாரவர்கள், பண்டிதமணி யவர்கள், நாட்டாரவர்கள் போன்ற பெருமக்களெல்லாம் எனக்கு ஆசிரியர்களாக விளங்கினர். ஆகவே தமிழைப் பொறுத்த வரையில் எனக்கு உண்மையான பற்றும் அதனைப் பலவகையாலும் தமிழ் மக்கள் பேணிக்காக்க வேண்டுமென்னும் ஆர்வமும் நிலைபெறுவன வாயின.

மறைமலை யடிகளின் தமிழைக் குறைகூறியவருக்கு மறுப்புக் கூறிய நிகழ்ச்சியைக் குறுப்பிட்டீர்கள். இக்கருத்தினைச் சிறிது ஆழமாகச் சிந்தித்தல் வேண்டும். இதனைக் கூறியவரை நாம் நொந்துகொள்ளுவதில் பயனில்லை. அவர் ஒருவர் என்றுமட்டும் நீங்கள் நினைக்கக் கூடாது. அக்கொள்கையுடையார் பலர். அவர்கள் எல்லோருடைய சார்பாக அவர் அன்று கூறினரெனக் கொள்ளுதல் வேண்டும். இன்னுஞ் சற்று ஆழமாக எண்ணின் சொன்ன ஆளைப் பற்றிக்கூட கவலையில்லை. நமக்குத் திருவள்ளுவர் அருளிய கருத்தும் இதுவேயாகும். 'சொல்லுகின்றவரை நோக்காதே, சொல்லப்படும்

கருத்துக்களை நோக்கு' என்பதே அம்மொழி. இருந்தும் இன்னார் சொன்னார் என்று ஆளையும் வேடத்தையும்கண்டு மயங்கி இவற்றிற் கப்பாலுள்ள உண்மை காணவேண்டுமென்னும் உரமுமின்றி மக்கள் தடுமாறுகின்றனர். இவ் விழிநிலையில் நாடு போய்க்கொண்டிருக் கின்றது.

மறைமலையடிகளின் உரை நடையைக் குறை கூறியதற்கு முதலாக நின்றது, அவர் வடமொழி விரவாமல் எழுதியமையேயாகும். வடமொழி விரவி எழுதுவதே இயற்கை. வடமொழி விரவாமை செயற்கையாக வலிந்துமேற்கொள்ளும் முறையென வாதிடுகின்றனர். இக்கொள்கை இடைக்காலத்தில் விளைந்தபயன். இக்கருத்தினைப் பாட்டாகப் பாடிய புலவர்களும் நம்மிடையே வாழ்ந்துள்ளனர். அவர்கள் சமயத் துறையில் பெரியவர்களாக இருக்கலாம். இன்றும் சமயத்துறையைப் பொறுத்தமட்டில் பாராட்டவும் செய்யலாம். ஆனால் தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் அவர் தமிழ் மொழியின் உண்மை இயல்பினை அறியாதவரென்றுதான் கூறவேண்டும். தமிழனாகவுள்ளான் என்ற அளவில் தமிழனையும், தமிழ் எழுத்துக் களானியன்றது என்ற அளவில் தமிழ்ப் பாட்டுக்களையும் பாராட்டும் மனப்பான்மை கூடாது.

"அன்றியும் தமிழ்நூற் களவிலை அவற்றுள்
ஒன்றேயாயினுந் தனித்தமி ழுண்டோ?"

இதுவும் தமிழ்ப் பாட்டுத்தான். இதனைப் பாடியவரும் தமிழ்ப் புலவரே யாவர். தமிழ் எழுத்தானியற்றப்பட்டுத் தமிழினியல்பிற்கு மாறான கருத்தை விளக்குவதைக் காண்மின்! இப்பாடல்கொண்டு இவர் காலப் புலவர் சிலரின் மனநிலையை அறியலாம்.

ஒன்றேயாயினும் தனித் தமிழுண்டோ? என்றால் உண்டு என்றுதான் விடை கூறவேண்டும். திருமணம் செல்வகேசவ முதலியாரவர்கள் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சி நூலொன்று எழுதி யுள்ளார். அவ்வாராய்ச்சியில் தனித் தமிழில் நூலுண்டு எனச் சான்றுடன் விளக்கியுள்ளார். திருக்குறள் போன்ற நூற்களில் வட மொழிக்கலப்பு மிகக்குறைவாகும். பத்துப் பாட்டு—எட்டுத்தொகை போன்ற தொகை நூற்களில் பிறமொழியில்லை யென்று கூறுமள விற்குத் தனித் தமிழாட்சியைக்காணலாம். பதினைாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதரும், பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமானரும் அக்காலச் சூழ்நிலையில் வடமொழி கலந்தே பாடினர். சமயத்துறை அல்லாத துறையில் வடமொழிக்குத் தமிழர் கடன்பட வில்லை, டாக்டர் கால்டுவெல்லும் இக்கருத்தினை வற்புறுத்தியுள்ளார். தமிழ் தனித்தியங்கும் தன்மையுடையதெனவும், தமிழானது வட மொழியின்றி மிளிரும்என்றும் மொழிந்தார். ஆனால் இவருக்கு முன்னர் இந்நாட்டிற்குச் சமயத்துறை சார்பாக வந்துசென்ற மேனாட்டறிஞர் சிலர் சந்தையிலும், புகைவண்டியிலும் பிறமொழி கலந்து கொச்சை

யாகப் பேசுவார் பேச்சை அப்படியே தமிழெனக்கொண்டு, தமிழ் வடமொழியின் திரிபுமொழி என்றனர். "வில்கின்ஸ்", "கோல்புருக்", "காரே" போன்ற அறிஞர் இத்தகையோரே யாவர். மேற்காட்டிய வண்ணம் இடைக்கால நம்மவர் பாடலும் கொள்கையும், தமிழை நன்கு ஆய்ந்தறியாத மேனுட்டினர் எழுதிய சில கருத்துக்களும் மறைமலை அடிகளின் உரைநடையைக் குறைகூறும்படியாக அமைந்த வெனலாம்.

தமிழ்ச் சொற்களையெல்லாம் வடமொழியெனச் சாதித்து எழுது வோரும் உண்டு. இவர்கள் ஆராய்ச்சியெல்லாம் நகைப்பிற்கிட மாகும் சழக்குரையே யன்றி வழக்குரையன்று. பீழை யென்பது தமிழ்ச் சொல். இச்சொல்லைத் திருவள்ளுவர் கையாண்டுள்ளார். இவ்வருமைத் தமிழ்ச்சொல் வடமொழிப் பீடையை ஒட்டிக்கொண்டு வந்ததாம். தமிழுக்கேயுரிய யாழையும் வடமொழி யெனக்கூசாது கூறக் கேட்டோம். ஜியாஜ்-யாஜ் ஆகி, யாழாயிற்றும். ஒரு மொழியி லிருந்து இன்னொரு மொழிக்குச் சொற்கள் வரும்போது ஏற்படும் வேறுபாடுகளைப்பல சொற்கள் மூலம் வரன்முறை பிறழாமல் எடுத்துக் காட்டி நிறுவுதல் வேண்டும். அதுவே 'மொழிநூன்' முறைக்கு ஒத்ததாகும். வடமொழியாக்கியே எச்சொல்லையும் காட்டவேண்டு மென்னும் எண்ணம் பொருந்தாது. இவர்கள் ஆய்வுகளை எண்ணும்போது காலுதை யென்பதுதான் கழுதையாயிற்று என்றும், கலேஜ்—என்பது இருபத்தைந்து அகவையில் பயிலுமிடம் என்றும் கூறுவாருரை போன்றுள்ளமையை அறிஞர் காண்க.

தொல்காப்பியர் செய்யுட்குரிய சொற்களைக் குறிப்பிடும்போது வடசொல்லையும் குறிப்பிட்டுள்ளாரே; ஆகவே வட சொல் விரவி எழுதவேண்டுமென்பது அவருக்கும் உடன்பாடென உரைக்கின்ற னர். இயற் சொல்லிற்கு முதலிடமும் திரிசொல்லிற்கு இரண்டா மிடமும், திசைச் சொல்லிற்கு மூன்றுமிடமும் வட சொல்லிற்கு இறுதி யிடமும் தந்து கூறிய நுட்பத்தைச் சிறிதும் சிந்தியாது பேசுதல் தகுமா? பிற மொழிக் கலப்பின்றித் தமிழ் எழுதமுடியாதென்ற கொள்கையே தனித் தமிழில் எழுதவேண்டுமென்னும் எண்ணத்தைத் தூண்டிற்று. வடமொழி வெறுப்பன்று. இத்துறையில் 'செயற்கரிய செய்வர் பெரியர்' என்ற முறையில் மறைமலையடிகள் விளங்கினர். நம் கரந்தைத் தமிழ்ச் சங்கமும் இத்தொண்டில் முனைந்து நின்றது. திரு. கி. இராமலிங்கனர் தமிழாக்கிய காலத்தில் அவரை இகழ்ந்த வர்கள் இன்று ஏற்றுக்கொண்டு வருவதை அறிந்து வருகின்றோம். பிற மொழிக் கலப்பின்றி எழுதுவது ஒரு சீரிய குறிக்கோளாகும். பண்படா நாவினர் தமிழை மொழிய மனமின்றி வடசொற் கலப்பை விரும்புவர்.

பிற மொழிச் சொற்களைத் தமிழில் இயலாத விடங்களில் அமைத் துக்கொள்ளலாம். அதனுற் குறையில்லை. உரைநடை அவரவ ரியல்பைப் பொறுத்து அமையும். தனித் தமிழ் எழுத்தாளரைக்

குற்றகூறவேண்டாம். அதுபோன்றே முடியாதவர்கள் கலந்து எழுதும் நடையையும் இகழவேண்டியதில்லை. கருத்தைக் கொள்ளு மளவில் அமையலாம். வடமொழிச் சொற் கலப்பின் அளவைக் கொண்டு பெருமை பாராட்டுவாருமுண்டு. இதுவும் சரியன்று. தமிழ் இன்னும் நம் வாழ்வுத் துறைதோறும் பயன்படுத்தப்படவில்லை. திருக்கோயில்களில் தமிழிற்குரிய இடம் அளிக்கப்பெறவில்லை. இந் நிலையும் மாறவேண்டும். தமிழைப் பயிலும் மாணவர்களாய நீங்கள் ஆசிரியத் தொழிலொன்றையே நம்பக்கூடாது. தமிழாசிரியர் தொழி லுக்குத்தான் தமிழ்ப்படிப்பு என்ற நிலை மாறவேண்டும். நம்மொழியை நாமறியவேண்டுமென்பது சிறந்த கோட்பாடாகும். மற்றவரும் உணரும்வண்ணம் செய்வது சிறந்த குறிக்கோளேயாகும். ஆனல் அதற்கு ஆசிரியத் தொழில்தான் வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இசை, நாடகம் போன்ற துறைகளில் தமிழ்ப் புலமையுடையார் முயற்சிசெய்து வெற்றிபெறல் வேண்டும்.

நிழற்படக் காட்சிகளை வெறுத்துப் பயனில்லை. எளிமையாகக் குறைந்த செலவில் மக்கட்குப் பொழுதுபோக்காகவும் நல்ல கருத்துக் களை விளக்கும் கருவியாகவும் பயன்படுகின்றது. இத்துறையிலும் தமிழைப் பயில்வார் முயலலாம். எழுத்தாளர்களாக முயலலாம். வேலையில்லாக் குறை தமிழ்ப் படிப்பாருக்குமட்டுமிருப்பதாக எண்ணு வது தவறு. காலச் சூழ்நிலைகட்கேற்றுற்போல நாமும் முயன்று வெற்றிபெறுதல் வேண்டும். செய்தித்தாள், வாரவிதழ், திங்களிதழ் போன்றவற்றிலும் நல்ல தமிழ் இடம்பெறத் தமிழ்ப் புலமையுடை யாருக்கு இடமிருத்தல் வேண்டும். 'தமிழ் நாடு' நாளிதழுடையார் நல்ல தமிழில் செய்திகளை வெளியிடவேண்டுமென்ற குறிக்கோளு டையார். தமிழகத்தின் தலைநகரான சென்னையிலிருந்து வெளிவர முயற்சி நடந்துகொண்டிருக்கின்றது. புலவர்கட்கு இடம்தரவேண்டு மென்று கூறியுள்ளோம். இவ்வாறு பல துறைகளிலும் தமிழ்ப் பயின் ருரும் தமிழும் விளங்கும் காலமே தமிழருக்கு நற்காலமாகும்.

கையறவு

கரந்தைத் தமிழ்ச்சங்க ஆதரவாளரும் பல்லாண்டுகள் பல மாணவர்களுக்கு உதவி நிதியளித்தவரும் பெருங்கொடையாளரும் புத்தக வணிகரும் வெளியீட்டாளருமான மதுரை பெருந்திருவாளர் **இ. மா. கோபாலகிருட்டினக் கோன்** அவர்கள் 17—3—60 வியாழனன்று தமது எழுபத்தாரும் அகவையில் இயற்கை எய்தினமை கேட்டுப் பெருந்துயர் உறுகின்றேம். அவரைப் பிரிந்து வருந்தும் குடும்பத்தாருக்கும் நண்பினர்க்கும் எங்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

பொழிற்றெண்டர்.

செவியுணரா ஒலிகள்

24 MAR 1960

ச. சம்பத்து, எம்.ஏ.,
அரசர் சரபோசிக் கல்லூரி, தஞ்சாவூர்.

ஒலி என்று நாம் அழைப்பதும், உணர்வதும், நம் செவிப் புலனால் அறியக்கூடியவற்றையே. ஆனால் நம் புலனுக்கு எட்டாத ஒலிகள் பலவாகும். அவற்றுள் சில பறவைகளாலும் விலங்குகளாலும் எழுப்பப்பட்டும் உணரப்பட்டும் வருகின்றன. அவ்வொலிகளையும் நாம் கேட்கும் தன்மையுடையவர்களாயிருந்திருந்தால், இடைவிடாது வரும் ஒலிகளின் தொல்லையால் அமைதி இழந்து வாடியிருப்போம். நல்லவேளை — நம் குறையே நமக்கு நிறையாயிற்று. இனி அவ்வொலிகளின் தன்மையையும், அவை விளைக்கும் விந்தையையும், அவற்றால் நாம் பெறவல்ல நன்மையையும் காண்போம்.

செவியுணரா ஒலிகளைப்பற்றி அறியப்புகுமுன் நாம் பொதுவாக ஒலிகளைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டியவர்களாகின்றோம். எனவே முதலில் ஒலி எவ்வாறு உண்டாகின்றது, பரவுகின்றது என்பதனைக் காண்போம்.

வீணையிலிருந்து நாதத்தை எழுப்ப அதன் கம்பியை மீட்டுகின்றோம். அதனால் அது முன்னும் பின்னுமாக அசைகின்றது. கம்பி முன்னோக்கி அசைகின்றபோது அதன் முன்புறத்தே அருகிலுள்ள காற்றுத் துகள்கள் நெருக்கப்படுகின்றன. அதனால் அங்கே அடர்த்தி அதிகமாகின்றது. ஆனால் காற்று நீண்டு சுருங்கும் (elastic) தன்மையுடையதாதலால் நெருக்கப்பட்டு காற்றுத்துகள்கள் விரிவடைகின்றன. அப்பொழுது அவற்றிற்கு அடுத்துள்ள காற்றுத் துகள்கள் நெருக்கப்பட்டு அடர்த்தி அதிகமாகின்றது. அவை இதே முறையில் அவற்றிற்கடுத்துள்ளவற்றை நெருக்க, தொடர்ந்து காற்றில் இந்த அழுத்தம்—அடர்த்திகள்—பரவுகின்றன. பின்னர் கம்பி பின்னோக்கி அசையும்போது அதன் முன்னே காற்றின் அழுத்தம் குறைந்து தளர்த்தியுண்டாகின்றது. அதனால் அவற்றிற்கடுத்துள்ள காற்றுத் துகள்கள் அடர்த்தி குறைந்த தளர்த்தியை நோக்கி நகர அங்கே தளர்த்தியுண்டாகின்றது. இவ்வாறே இந்த தளர்த்திகளும் அடர்த்திகளைப்போலப் பரவுகின்றன. இவ்வாறு கம்பி ஒரு முறை முன்னும் பின்னுமாக அசைவதால் காற்றில் அடர்த்திகளும் தளர்த்திகளும் பரவுகின்றன. இதனையே நாம் ஒலி அலைகள் என்கின்றோம். அவை காதினுள் நுழைந்து அங்குள்ள சவ்வுத்தோலை முன்னும் பின்னுமாக அசைக்கின்றன. அந்த அசைவே சில சிறு எலும்புகளின்மூலம் கேள்வி நரம்புகளுக்குச் சென்று ஒலியின் உணர்வை நமக்கு உண்டாக்குகின்றது. கம்பி தொடர்ந்து அசைந்துகொண்டிருந்தால், தொடர்ந்து அலைகள் காற்றிலே பரவ நாமும் ஒலியைக் கேட்கின்றோம். கம்பி அசைவை நிறுத்திவிட்டால் ஒலியும் நின்றுவிடும். எனவே ஒலி பொருள்களின் துடிப்பினாலே உண்டாகின்றது என்றும், அது அலைகள் வாயிலாய்ப் பரவுகின்றது என்றும் அறிகின்றோம். ஆனால் ஒலி அலைகள் பரவும்

போது காற்றுத் துகள்கள் முற்றும் தம்மிடத்தை விட்டு நகர்ந்து விடுவதாக எண்ணிவிடக் கூடாது. அவை இருந்த விடத்திலேயே முன்னும் பின்னுமாக அசைகின்றன. இதனை ஒரு எளிய எடுத்துக் காட்டின்மூலம் காண்பிக்கலாம். குளத்திலே ஒரு சிறு சில்லைப் போட்டால், நீரில் அலைகள் தோன்றிப் பரவுவதைக் காணலாம். அதில் ஒரு சிறு நெட்டித்துண்டைப் போட்டால் அது அலைகளுடன் முன்னேக்கிச் செல்லாமல் இருந்த விடத்திலேயே மேலும் கீழுமாக அசையும். இதிலிருந்து நீர்த்துளிகள் இருந்த விடத்திலேயே அலைவுறுகின்றனவே தவிர, இடத்தைவிட்டுச் சென்றுவிடுவதில்லை என்பதை அறிகின்றோம். இவ்வாறேதான் காற்றில் ஒலி அலைகள் பரவும்போதும், காற்றுத் துகள்கள் இடத்தைவிட்டு நகர்ந்து சென்று விடுவதில்லை. அவை அலை பரவும் திசையிலேயே முன்னும் பின்னுமாக அசைகின்றன.

ஒரு பொருளிலிருந்து ஒலியை உண்டாக்க வேண்டுமானல் அதனை அதிர்வடையச் செய்யவேண்டுமெனக் கண்டோம். ஆனல் அதிர்கின்ற எல்லாப் பொருள்களிலிருந்தும் ஒலி எழுவதாக நமக்குத் தெரிவதில்லை. சான்ருக ஒரு தனி ஊசல் (Simple pendulum) முன்னும் பின்னும் அசைவதால் ஒலி உண்டாவதில்லை. அதன் காரணத்தைக் காண்போம். ஒலி, அலைகள் வாயிலாகப் பரவுகின்றதெனக் கண்டோம். அந்த அலைகளில் அடுத்தடுத்துள்ள இரண்டு அடர்த்திகளுக்கோ அல்லது தளர்த்திகட்கோ இடையிலுள்ள தூரம் அலை நீளம் (Wavelength) எனப்படும். ஏதேனுமோரிடத்தை ஒரு விஞடியில் கடந்துசெல்லும் அடர்த்திகளின் அல்லது தளர்த்திகளின் எண்ணிக்கை அலைவு எண் (Frequency) எனப்படும். ஒரு பொருள் துடிக்கின்றபோது ஏற்படும் ஒலியின் அலைவு எண் மாறுபட்டால் அதன் சுருதி மாறுபடுகின்றது. ஒலியின் சுருதி அதிகமானல் அதன் அலை நீளம் குறையும். அவ்வாறே அலை நீளம் அதிகமானல் சுருதி குறையும். நல்ல இசை அறிவு படைத்தவர்கள் அலைவு எண் ஏறத்தாழ ஒன்ருகவுள்ள இரு ஒலிகளைக்கூட பிரித்துணர முடியும். சான்ருக அலைவு எண் 2000 உடைய ஒரு ஒலியிலிருந்து அலைவு எண் 2003 உள்ள ஒலியினைப் பிரித்துணரமுடியும். மேலும் ஒரே அலைவு எண் உள்ள இரு ஒலிகள் வெவ்வேறு உணர்வை உண்டாக்க இயலும்; அதாவது ஒன்று அதிக ஓசையுடையதாகவும், மற்றென்று குறைந்த ஓசை யுடையதாகவும் இருக்கலாம். உதாரணமாக ஒரு இசைக் கவையை (Tunning fork) மெதுவாகத் தட்டினல் மெல்லிய ஓசையும், வேகமாகத் தட்டினல் அதிக ஓசையும் உண்டாவதைக் காணலாம். ஆனல் அவ்விருவொலிகளின் அலைவு எண்ணும் ஒன்றே. இது அதிர்வுறும் பொருளின் வீச்சைப் பொறுத்தது! அதாவது அதனுடைய அமைதி நிலை (equilibrium position)யிலிருந்து முன்னே பின்னே செல்கின்ற அதிக தூரத்தைப் பொறுத்ததாகும். ஒரு ஒலியினுடைய அலைவு எண் 1000-க்கும் 3000-க்கும் இடைப்பட்டதாயிருக்குமானல் அதன் வீச்சு மிகக் குறைவாக இருந்தாலும் நம்மால் நன்ருக உணரமுடியும்.

ஆனுல் அலைவு எண் குறைந்தால், ஒலி அலைகளின் வீச்சு ஒரு குறிப்பிட்ட அளவைவிட அதிகமாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் அதனை நம்மால் கேட்கமுடியும். அலைவு எண் குறையக்குறைய இந்த அளவு அதிகமாகிக்கொண்டே செல்லும். எனவே அலைவு எண் 2000 உள்ள ஒரு ஒலியை நாம் கேட்கவேண்டுமானுல் அதன் வீச்சு அலைவு எண் 2000 உள்ளதின் வீச்சைவிட மிக அதிகமாக இருக்கவேண்டும். மேலும், அலைவு எண் 20-க்கு குறைந்துவிடுமானுல் அந்த ஒலியை நாம் கேட்கவே முடியாது. இதனுல்தான் ஊசல் அலைவதால் ஏற்படும் ஒலியை நாம் உணர இயலுவதில்லை — ஒரு தனி ஊசலின் அலைவு எண் 20-ஐ நெருங்குவதே இல்லை. அவ்வாறே அலைவு எண் 20000-க்கு அதிகமானுலும் அவ்வொலியை நம்மால் கேட்க இயலாது. அலைவு எண் 20-க்கு கீழ்ப்பட்ட ஒலிகளை கீழ்ப்புற ஒலிகள் (infrasonics) என்றும், 20000-க்கு மேற்பட்டவற்றை மேற்புற ஒலிகள் (Ultrasonics) என்றும் அழைக்கின்ரும். இவற்றுள் மேற்புற ஒலிகள் அதிக வியப்பைத் தருவனவாயும், பயனுடையனவாயுமுள்ளதால் அவற்றைப்பற்றி இனிக் காண்போம்.

மேற்புற ஒலிகளை எழுப்பவோ உணரவோ நம்மால் இயலாவிடினும், நாய், பூனை போன்றவை உணரும் ஆற்றலுடையவை என விஞ்ஞானிகள் கண்டுள்ளனர். இதனைப் பழங்காலத்திலேயே மக்கள் அறிந்திருந்தார்கள்—(மேற்புற ஒலிகளைப்பற்றிய முழு உண்மைகளை அறிந்திராவிடினும்—) என நம்ப இடமிருக்கின்றது. காடு புகுந்து கள்ளத்தனமாக வேட்டையாடுபவர்கள் ஒரு தனி விதமான ஊதலை உபயோகித்து வந்தனராம். அதில் உண்டாகும் ஒலியை மக்கள் உணரமுடியாது. ஆனுல் அவர்களுடைய வேட்டை நாய் கேட்டு அவரிடம் வந்து சேருமாம். இதனுல் காவலர் கண்ணில் மண்ணைத் தூவி, அவர் அறியாமல் தம் நாயைத் தம்மிடம் அழைக்க அவர்களால் முடிந்தது. இதனினும் நம்மை வியப்பிலாழ்த்துவது, பாழடைந்த மண்டபங்களை பாத்தியதைக் கொண்டாடிக் கூட்டம் கூட்டமாக வாழ்ந்துவரும் வௌவால்களே. வௌவால்கள் பார்வை மங்கியவை ; காட்சி யளவாலே பொருள்களை அறியும் ஆற்றலில்லாதவை. இருந்தாலும் அவை நள்ளிரவின் கும்மிருட்டிலும் வழியறிந்து, தடைகள் தாண்டி தயக்கமின்றி செல்லவும், அவற்றின் உணவாகிய சிறு பூச்சிகளைக் குறிவைத்து கொத்திச் செல்வதிலும் ஈடிணையற்ற வன்மை பெற்றனவாக வுள்ளன. இது உண்மைதானு என்பதனை அறிய அவை செல்லும் வழியிலே பல கம்பிகள் குறுக்கும் நெடுக்குமாக கட்டிவைக்கப்பட்டனவாம். ஆனுல் அவை அவற்றைத் தாண்டியோ, உள் புகுந்தோ சென்றனவே தவிர, தவறியும் தொடவில்லையாம். இதனினும் ஒரு விந்தையை ஒருவர் கண்டதாகக் கூறியுள்ளார். ஒரு வௌவால், சுற்றிச் சுழலும் மின்சார விசிறியின் இறகுகளிடையே புகுந்து புகுந்து வெளிவந்தவாறிருந்ததாம். கண்ணில்லாத வௌவால் சுழலாதிருக்கும் விசிறியினூடே புகுந்து வருதலே அருமை; ஆனுல் அதுவோ வினுடிக்கு 800 தடவை சுழலும் விசிறியினூடே தொடர்ந்து புகுந்து வந்த

தென்றால் என்ன விந்தை! இதற்குக் காரணமான புலன் எதுவாக விருக்குமென விஞ்ஞானிகள் அறிய ஆவல் கொண்டனர்; ஒவ்வொரு புலனாக சோதனை செய்தனர். அதற்கு கண்ணே இல்லாது செய்தார்கள்; சுவையறியாது செய்தார்கள், மணம் நுகர இயலாது செய்தார்கள்; இவ்வாறெல்லாம் செய்தபோதும் அதன் இயற்கைக்குத் தடையேதும் ஏற்படவில்லை. ஆனால் அதனுடைய செவிகள் பறிக்கப்பட்டபோது அது விழியற்ற குருடனென வழியறியாது திகைத்துத் திண்டாடியதாம். எனவே வெளவால்கள் ஒலியினாலேயே—அதுவும் மேற்புற ஒலிகளாலேயே—(Ultrasonics) வழியறிகின்றன எனக் கண்டார்கள். மேலும் அதனுடைய வாய் பூட்டப்பட்டபோதும் செவியற்ற நிலையையே யெய்தியது. எனவே அவை வாயினால் ஒலி எழுப்புகின்றன என்றும் அவ்வொலி எதிரிலுள்ள பொருள்களில்பட்டு எதிரொலிக்க அதனைச் செவியினால் அறிந்து வழியறிகிறதெனவும் உறுதியாக அறிந்தார்கள். வெளவால்கள் தடைகளை அறிய ஒரு குரலை எழுப்பிவிட்டு அது எதிரொலித்துத் திரும்பிவரும்வரை காதுகளைத் தீட்டிக்கொண்டு கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருக்கும். எதிரொலியைக் கேட்டவுடன் அடுத்தொரு ஒலியை அனுப்புகின்றது. இவ்வாறு அது தொடர்ந்து ஒலிச்சைகைகளை (Sound Signals) அனுப்பி பொருள்களைத் தெரிந்து கொள்கின்றது. திரும்பிவரும் ஒலியினுடைய தன்மையிலிருந்து அது என்ன பொருளில்பட்டு வருகின்றது என்பதனையும்) [ஒலி எழுப்பியதிலிருந்து அது எதிரொலித்துத் திரும்பிவர ஆகும் நேரத்திலிருந்து பொருள்கள் இருக்கும் தொலைவையும்] அறிந்து கொள்கின்றது—ஒரு பொருள் அருகிலிருக்குமானால் அதில் பட்டுவரும் ஒலி விரைவிலும் தொலைவிலிருந்தால் நேரம் அதிகமாகியும் எதிரொலித்துவரும் என்ற உண்மை நாமறிந்ததே. எனவே ஒரு பொருள் அருகிலிருந்தால் வெளவால் அடிக்கடி ஒலிக் குறிப்புகளை அனுப்பிக் கொண்டிருக்கும். உதாரணமாக ஒரு பொருள் 65 அடி தூரத்திலிருக்குமானால் வினாடிக்கு ஏறத்தாழ எட்டு சைகைகளையும், பொருள் மூன்றடிக்குள்ளிருந்தால் வினாடிக்கு அறுபது சைகைகளையும் அனுப்புகின்றது.

வெளவால்கள் மட்டுமல்லாது, அவற்றிற்கு இரையாகும் சிறு பூச்சிகள்கூட மேற்புற ஒலிகளைக் கேட்கும் இயல்புடையன எனக் கண்டுள்ளார்கள். அவற்றின்மீது மேற்புற ஒலிகளைப் படுமாறு செய்தபோது அவற்றுள் சில திடீரென வேகமாக தப்பியோடியனவாம்; சில இறந்து விட்டதுபோல் நடித்து, மயங்கி விழுந்தனவாம்—என்ன வியப்பு!

இதுவரை வெளவால்கள் மேற்புற ஒலிகளை எழுப்பி அவற்றின் எதிரொலியினால் பொருள்களை அறிந்து கொள்கின்றன எனக் கண்டோம். ஆனால் அவை ஏன் மேற்புற ஒலிகளை மட்டும் பயன்படுத்த வேண்டும்; சாதாரண நாமுணரும் ஒலிகளைப் பயன்படுத்தலாகாது என்பதனையும், வெளவால்கள் நமக்குக் காட்டும் வழியினையும் பிறகு காண்போம்.

2 4 MAR 1960

தமிழகத்தின் நெசவுத் தொழில்.

டாக்டர் மா. இராசமாணிக்கனர்.

முன்னுரை :

முதல் மனிதன் மலைக் குகையிலும் மா நிழலிலும் வாழ்ந்தான். அப்பொழுது அவன் இலைகளையும் மரப் பட்டைகளையும் தனக்கு ஆடையாகப் பயன்படுத்தினன். புதிய கற்கால மனிதன் கற்களைக்கொண்டு தனக்கு வேண்டிய கருவிகளைப் பதப்படுத்திக் கொண்டான்; நாள் ஆக ஆக, ஆற்றங்கரை ஓரங்களில் வாழத் தொடங்கினன்; அப்பொழுது களிமண்ணைக் கொண்டு பாத்திரங்கள் செய்ய அறிந்தான்; ஈர நிலத்தில் பயிர் செய்யத் தொடங்கினன். அவன் இவ்வாறு பயிர்செய்தவற்றுள் பருத்தியும் ஒன்றாகும். அப்பருத்தியைக் கொண்டு அவன் ஆடை நெய்ய அறிந்தான். மனிதன் இந்த முன்னேற்றத்திற்கு வரப் பல ஆயிரம் ஆண்டுகள் ஆகி இருத்தல் வேண்டும் என்று மனித வரலாற்றை ஆராய்ந்த அறிஞர் அறைகின்றனர்.

உலக நாடுகளில் அகழ்ந்து எடுக்கப்பட்ட புதிய கற்காலப் பொருள்களில் ஆடைகளைப் பதப்படுத்தும் கற்கருவிகள் (Slick-Stones) கிடைத்துள்ளன என்பதே இம்முடிவுக்குரிய சான்றாகும்.

பிற்காலத்தில் :

உலக நாகரிகங்களில் பழமையானவை சிந்துவெளி நாகரிகம்–சுமேரிய நாகரிகம்—எகிப்திய நாகரிகம் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். எகிப்திய மன்னருடைய புதைகுழிகளில் மிக மெல்லிய ஆடைச் சிதைவுகள் கிடைத்துள்ளன. அவ்வாறே சுமேரியாவில் கிடைத்த புதைபொருள்களிலும் உடை அணிந்த மக்களைக் குறிக்கும் உருவங்கள் பலபொருள்கள்மீது தீட்டப்பட்டுள்ளன. சிந்துவெளியில் கிடைத்த புதைபொருள்களுள் ஒரு யோகியின் உருவம் கிடைத்துள்ளது. அதன்மீது பூவேலைப்பாடு அமைந்த ஆடை போர்த்தப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் பார்க்கும்போது, புதிய கற்காலத்துக்குப் பின் மனிதனது அறிவு பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்தாற் போலவே, நெசவுத் துறையிலும் நல்ல வளர்ச்சி அடைந்து வந்துள்ளது என்பது தெரிகிறது.

வேதங்களிலும் பிற நூல்களிலும் ஆடைகள் கூறப்படுகின்றன. மரப் பட்டையிலிருந்து நெய்யப்பெற்ற ஆடை மரவுரி எனப் பெயர் பெற்றது என்பதை இராமாயணத்தால் அறிகிறோம்.

சங்க காலத்தில்:

பருத்தி வெப்பப் பகுதியில்—கரிசல் மண் உள்ள பகுதியில் பயிராவது. எனவே, தமிழகம் பருத்தி பயிர் செய்வதற்கு ஏற்ற இடமாகும். அதனால் தமிழகத்தில் மிகப் பழையகால முதலே பருத்தி பயிராகி வந்தது என்று கூறலாம். சில ஊர்களைச் சுற்றியும் பருத்தி விளையும் நிலங்கள் சங்க காலத்தில் இருந்தன; அதாவது அவ்வூர்களைச் சுற்றியும் பருத்திச் செடிகளே வேலி களைப்போல் பயிராகி வந்தன என்பதாம்—

"பருத்தி வேலிச் சீறூர் மன்னன்" (புறம்–299)

இன்றைய தமிழகத்தில் சிற்றூர் பலவற்றில் நூல் நூற்கும் வேலை பெண்களே செய்து வருகின்றனர். வாழ்வரசிகளும் கைம்பெண்களும் இவ்வேலையில் ஈடுபட்டுள்ளனர். கணவரால் துரத்தப்பட்டுத் தனிக்குடித்தனம் நடத்தும் பெண்களும் இந் நூல் நூற்கும் வேலையில் பலராக ஈடுபட்டுள்ளனர்.

சங்க காலத்திலும் இதே நிலைமை தமிழகத்தில் இருந்தது என்பது தெரிகிறது. இங்ஙனம் நூல் நூற்கும் பெண்டு, "பருத்திப் பெண்டு" (புறநானூறு, 125) என்று கூறப்பட்டாள். கைம்பெண்களும் மிக மெல்லிய நூல் இழைகளை உண்டாக்கினர் என்பது,

"ஆளிற் பெண்டிர் தாளிற் செய்த
நுணங்குநுண் பனுவல்"

என்னும் புறநானூற்று அடிகளால் (353) அறியப்படும்.

மிக மெல்லிய ஆடைகள்:

சங்க காலப் பேரரசரிடமும் சிற்றரசரிடமும் இயற்றமிழில் வல்ல புலவரும், இசைத் தமிழில் வல்ல பாணரும், நாடகத் தமிழில் வல்ல கூத்தரும் சென்று தம் புலமையைக் காட்டினர். அவர்கள் அப்புலவர் தம் கலைத்திறமையைப் பாராட்டி அவர் களுக்குத் தேவையான பரிசிலை நல்கினர்; அங்ஙனம் நல்குவதற்கு முன் அவர் தம் கந்தை ஆடைகளை அகற்றி, மெல்லிய ஆடைகளை வழங்கினர் என்று அப்புலவர் பெருமக்களே மனம் மகிழ்ந்து கூறியுள்ளனர். அவர் கூற்றைக் கீழே காண்க:

1. "திருமலர் அன்ன புதுமடி" (புறம்—390)

'அழகிய பகன்றை மலர் போன்ற புதிய ஆடை' என்பது இதன் பொருள்.

2. "போதுவிரி பகன்றைப் புதுமலர் அன்ன
அகன்றுமடி கலிங்கம்" (புறம்–393)

'அரும்பி மலர்ந்த பகன்றையின் புதுமலர்போல அகல மடிக்கப்பட்ட ஆடை' என்பது இதன் பொருள்.

3. "புகைவிரிந் தன்ன பொங்குதுயில்" (புறம்–398)

'புகையை விரித்தாற்போன்ற உயர்ந்த ஆடை' என்பது இதன் பொருள்.

4. 'கரிய மலைமீது வெண்மையான அருவி இறங்குகிறது. அவ்வெள்ளருவி வெண் துகிலைப் போன்றது' என்று குறிஞ்சிப் பாட்டுக் கூறுகின்றது.

"அவிர்துகில் புரையும் அவ்வெள் அருவி" (வரி. 55)

இங்குப் புலவர் வெள்ளருவியை மக்களுக்கு விளக்கிக் காட்டத் துகிலை உவமையாகக் கூறுவதிலிருந்து, மக்களுக்கு வெள்ளாடை நன்கு தெரிந்திருந்தது என்பது அறியப்படுகின்றது.

5. மெல்லிய நூலால் கலிங்கம் (ஆடை) நெய்யப் பெற்றது, என்பதை, 'மென்நூல் கலிங்கம்' என்னும் மதுரைக் காஞ்சி அடியால் (வரி, 554) அறியலாம்.

6. நீளமாக நெய்யப்படும் ஆடை வேண்டிய அளவு பார்த்து அறுக்கப்பட்டதால் அறுவை எனப் பெயர்பெற்றது. எனவே ஆடை எனினும் அறுவை எனினும் பொருள் ஒன்றேயாகும். கரிகாற்சோழன் தன்னைப்பாடி வந்த பொருநர்க்குப் பாம்பின் சட்டை போன்ற மெல்லிய ஆடையைக் கொடுத்தான் என்று பொருநர் ஆற்றுப்படை பேசுகின்றது.

"அரவுரி யன்ன அறுவை" (வரி. 83)

7. 'மூங்கிலின் மெல்லிய தோலை உரித்தாற்போன்ற மாசில்லாத ஆடை' என்று சிறுபாண் ஆற்றுப்படை செப்புகின்றது.

"காம்பு சொலித் தன்ன அறுவை" (வரி. 236)

8. திரு ஆவினன் குடியில் மரவுரியை உடையாகச் செய்து அணிந்துகொண்ட முனிவர் முன்னே செல்லப், பின் சென்ற யாழ்ப்பாணராகிய கந்தருவர் புகையை முகந்தாற்போன்ற தூய உடையை அணிந்திருந்தனர் என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது.

"புகைமுகந் தன்ன மாசில் தூவுடை" (வரி. 138)

இங்கு உடையின் மென்மைக்குப் புகை உவமையானதைக் காண்க.

பலநிற ஆடைகள் :

1. இக்காலத்தைப் போலவே சங்க காலத்திலும் கரையை உடைய ஆடைகள் நெய்யப்பட்டன என்பது தெரிகிறது.

"நேர்கரை நுண்ணூற் கலிங்கம்" (புறம்–392)

'நேரிய கரையை உடைய நுண்ணிய நூலால் இயன்ற உடை' என்பது இதன் பொருள். கரை என்று வருவதால், இக்காலத்தைப் போலவே ஆடையில் பலநிறக் கரைகள் அக்கால ஆடைகளில் அமைக்கப்பட்டன என்பது தெளிவு. எனவே, இக்காலத்தில் உள்ளது போலவே அக்காலத்திலும் நூலுக்குப் பலவகை நிறங்களை (சாயம்) ஊட்டி வந்தனர் என்பது தெளிவாகும்.

2. இக்காலத்தில் வெண்பட்டு மேலாடையில் அகலப் பக்கங்கள் இரண்டிலும் கரையோரம் திரள முடிந்த முடிகளைக் காணலாம். இந்த 'முடி' அக்காலத்தில் 'கொட்டை' எனப் பட்டது போலும்.

"தூய, கொட்டைக் கரைய பட்டுடை"

என்பது பொருநர் ஆற்றுப்படை (வரி, 155).

'தூயவாகிய திரளமுடிந்த முடிகளைக் கரையிலேயே முடியப் பட்ட பட்டால் ஆகிய உடைகள்' என்பது இதன் பொருள்.

3. "நெடுங்கரைக் காழகம்" (மதுரைக்காஞ்சி–598)

'நெடிய கரையை உடைய, நீல நிறத்தை உடைய புடவை என்பது இதன் பொருள்.

4. "நீலக்கச்சைப் பூவார் ஆடை" (புறம்–274)

'போர்வீரர்கள் நீலநிறத்தையுடைய கச்சினை அணிந்திருந் தனர்' என்பது இதன் பொருள்.

5. சேரநாட்டுத் தலைநகரான வஞ்சிமா நகரில் பல தொழிலாளர் தெருக்கள் இருந்தனவாக மணிமேகலை என்னும் காவியம் கூறுகின்றது. அவற்றுள் கண்களால் காண்பதற்கும்

அரியதாகிய நுண்ணிய நூலினால் கைத்தொழில் மிகுந்து பல நிறங்களுடன் பொருந்திய ஆடை நெய்வோர் தெருக்களும் இருந்தனவாம். (காதை 28, வரி 52-3).

"கண்ணுழை கல்லா நுண்ணூற் கைவினை
வண்ண அறுவையர் வளந்திகழ் மறுகும்"

பூவேலை கொண்ட ஆடைகள்:

மேலே குறிப்பிடப்பெற்றபடி, 'இஃது இழை போனவழி' என்று குறித்துப் பார்க்க இயலாத நுண்மையை உடைய ஆடைகள் அக்காலத்தில் நெய்யப்பட்டன. அம்மெல்லிய ஆடைகளில் பூத்தொழில் அமைந்திருந்தது என்பதும், முற்றுப்பெற்றிருந்தது என்பதும் கீழ் வரும் அடிகளால் தெரிகின்றன:

1. "நீலக் கச்சைப் பூவார் ஆடை" (புறம்-274)

பூவார் ஆடை—பூத்தொழில் அமைந்த ஆடை.

2. "நோக்குநுழை கல்லா நுண்மைய பூக்கனிந்து" என்பது பொருநாற்றுப்படை (வரி, 82).

பூக்கனிந்து—பூத்தொழில் முற்றுப்பெற்று,

3. காவிரிப்பூம்பட்டினத்தில், மணிமேகலை வாழ்ந்த காலத்தில் பல வனங்கள் இருந்தன. அவற்றுள் உவவனம் என்பது ஒன்று. அது, கைத்தொழிலில் மேம்பட்ட வித்தகரால் இயற்றப்பட்ட, சித்திரத் தொழில் அமைந்த ஆடை போன்றது போலக் காட்சி அளித்தது என்று மணிமேகலை கூறுகின்றது.

"வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம்" (காதை-3, வரி167-9.)

ஆடைகளுக்கு மணமும் கஞ்சியும்:

1. பீடுமிக்க மாட மதுரையில் வாழ்ந்த பெண்மணிகள் தாங்கள் அணிந்து கொள்ளும் மெல்லிய நூலால் செய்த கலிங்கங்களுக்கு (ஆடைகளுக்கு) மணக்கின்ற அகிற்புகையை ஊட்டினர் என்று மதுரைக்காஞ்சி குறிக்கின்றது (554).

"மென்னூல் கலிங்கம் கமழ்புகை மடுப்ப"

2. "வங்க ஈட்டத்துத் தொண்டியோர் இட்ட
அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்"
(காதை–14, வரி 107-9).

என்பது சிலப்பதிகாரம். "துகில்—பட்டு வர்க்கம்; நாற்றம் கொளுவுதலால் இவற்றுடன் எண்ணினர்" என்பது அரும் பதவுரை. இவ்விரண்டு சான்றுகளால், **உயரிய ஆடைகளுக்கு நறுமணம் ஊட்டுதல்** அக்கால வழக்கம் என்பதை அறியலாம். பாண்டியன் நெடுஞ்செழியன் கஞ்சியிட்டுச் சலவை செய்யப்பெற்ற ஆடையை அணிந்திருந்தவன் என்று மதுரைக் காஞ்சி (வரி, 721) கூறுகின்றது.

"சோறமை வுற்ற நீருடைக் கலிங்கம்"

துகில்வகை:

கோவலன் காலத்தில் மதுரைக் கடைத்தெருவில்—அறுவைக் கடைகளில் விற்கப்பட்ட ஆடைகள் பருத்தி நூலாலும், எலி மயிராலும், பட்டு நூலாலும் தத்தம் பகுதிகளாக நெய்யப்பட்டு மடித்து அடுக்கி வைக்கப்பட்டிருந்தன என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

"நூலினும் மயிரினும் நுழைநூல் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூறு அடுக்கத்து
நறுமடி" (காதை–14, வரி 205-7).

அக்கடைகளில் கீழ்வருமாறு பெயர்பெற்ற ஆடைகள் இருந்தன என்று சிலப்பதிகாரத்திற்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லார் கூறியுள்ளார் *.

கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக் கம்பி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க் காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு †, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி.

---

* இவை சிலப்பதிகார மூலத்தில் இல்லை எனக்கொள்ளினும், அடியார்க்கு நல்லார் காலத்தில் (கி. பி. 14-ஆம் நூற்றாண்டில்) இருந்தன என்று திட்டமாகக் கூறலாம்.

† **தேவாங்கு** என்ற ஆடையை நெய்தவரே **தேவாங்கர்** எனப்பட்டனர் என்பது இங்கு அறியத்தகும்.

"சொல்லும் செயலும்"

வித்துவான், வி. சச்சிதானந்தம்.

எண்ணம், சொல், செயல் இம்மூன்றையும் வண்ணத் தமிழாக ஆக்கிய பெருமை தண்டமிழ் நாட்டார்க்கே உண்டு. அறிஞர்களின் உள்ளக் கருத்தினைத் தெள்ளத் தெளிவாக விளக்குவனவே இயற்றமிழாகும். ஒலிமுறையைக் கூட்டியும் குறைத்தும் கேட்பவர் நிலையைத் தம்மொடு சேர்ப்பதே இசைத் தமிழின் சிறப்பாகும். இசையொடு சேர்ந்த பாடலே இசைத் தமிழெனப்படும். 'இசைத்தல்' என்பதற்குச் சொல்லுதல் என்னும் பொருளுண்டு. 'சொல்' என்ற பெயரையே இசைத் தமிழ் கொண்டிருப்பது கண்டு களித்தற்குரியதாகும். இயலும் இசையும் சேர்ந்திலங்குவதே நாடகத் தமிழெனப்படும். நடித்த லாகிய செயல்தானே நாடகம்? மனித வாழ்க்கைக்கு இன்றி யமையாத—இயல்பாக இருக்கின்ற எண்ணம், சொல், செயல், ஆகிய இம்மூன்றையே மொழியாகக்கொண்டு விளங்குவது வேறெம்மொழிக்கும் இல்லாத—தமிழுக்கே யுரிய தனிச் சிறப் பாகும். மனிதனின் உள்ளத்திலேயுள்ள கருத்தை உரைத்தால் தான் உணரமுடியுமேயன்றி வேறெவற்றானும் அறிய முடியாது. எனவே உலக நடையில் ஒன்றியுள்ள சொல்லும் செயலுமாகிய இரண்டன் தன்மை குறித்து ஆராய்தலே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

366-ஆம் பக்கத் தொடர்ச்சி.

முடிவுரை:

இதுகாறும் கூறப்பட்ட உண்மைகளால் — தமிழகத்தில் மிகப்பழைய காலமுதலே ஆடைகள் நெய்யப்பட்டு வந்தன என்பதும், சங்க காலத்தில் மிக நுண்ணிய இழைகளைக் கொண்ட மெல்லிய ஆடைகள் நெய்யப்பட்டன என்பதும், அவற்றுள் சில பூத்தொழில் அமையும்படி நெய்யப்பட்டன என்பதும், நூலுக்குப் பலநிறங்களைத் தோய்த்துப் பலநிற ஆடைகள் நெய்யப்பட்டு வந்தன என்பதும், உயர்ந்த ஆடைகளுக்கு அகிற் புகை முதலிய மணப்பொருள்கள் ஊட்டப்பட்டன என்பதும் நன்கு அறியக்கிடக்கும் உண்மைகளாகும். சங்க காலத்திற்குப் பின்னும் நெசவுத்தொழிலும், சாயத்தொழிலும் நன்னிலையில் வளர்ந்து இருந்தன என்பதைப் பெருங்கதை, சிந்தாமணி, பெரியபுராணம் முதலிய நூல்களைக்கொண்டு நன்கு தெளியலாம்.

சமுதாயத்திலே ஓர் குடும்பம். தந்தை புகை பிடிக்கிறார். தாய் புகையிலே போடுகிறாள். இருவரும் தன் பிள்ளையை நோக்கி அறவுரை கூறுகிறார்கள். புகை பிடித்தல் கூடாது; தீமைகள் ஏற்படும் என்று அச்சுறுத்தித் தன் மகனைக் கண்டிக்கிறார்கள். அவன் இளையவன். அறவுரை கேட்டுத் திருந்தும் தன்மையில்லாதவன். பெற்றோரும் மற்றோரும் செய்வதையே தானும் பார்த்து, அறிந்து பழக்கத்தை மேற்கொண்டவன். மேடையில் பேசுபவர் முதல் வீட்டுத் திண்ணையில் பேசுபவர்வரை சொல்வது ஒன்றும், செய்வது வேறொன்றுமாக இருப்பதாக அவனது மனம் நினைக்கிறது. தானும் புகைபிடித்துக்கொண்டு அடுத்தவர்க்குப் புத்தி புகட்டும் நிலையை அடைகிறான். சொல்வதுபோல செய்ய முடியாது என்ற தவறான முடிவிற்கும் வந்துவிடுகிறான். தவறு செய்தவன் தன்னைப்போன்று தவறுசெய்தவர்களின் பட்டியலைத் தயார் செய்து அமைதியடைவதும், தன்னைப்போலவே சமுதாயமும் தவறுடையது என்று நினைப்புக்கொள்வதும் இயற்கைதானே? தனக்குரிய சான்றுகளைத் தேடுகின்றான். தமிழ்மறை அவன் கண்ணில் தென்படுகிறது. சொல்லுதல் யார்க்கும் எளிமையானது; சொல்லியபடி செய்வது அருமையானது என்னும் கருத்தமைந்த,

> "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
> சொல்லிய வண்ணம் செயல்"

என்னும் திருக்குறளினைக் கூறித் தன் கொள்கையை நிலைநாட்டித் தவற்றினை மறைக்க முற்படுகின்றான்.

அறத்தை அறிவுறுத்தும் அறிஞர்; ஒழுக்கத்தால் உயர்ந்த பெரியார்; நாவீறுகொண்ட நாவலர், சொல்லும் செயலும் வேறுபட்டாலும் தவறில்லை என்று கருதும் வகையில் குறள் கூறியிருப்பாரா? ஒருகாலும் கூறார். குறள் படிக்கும் அன்பர்கள் குறளின் கருத்திற்கேற்பப் பொருள் கொள்ளாமல், தம் கொள்கைக்கேற்பக் குறளுரையை மாற்றிக்கொள்வதால் எல்லாவற்றையும் கடந்த வள்ளுவரையும் சாதி மத பேதங்கட்கு உட்பட்டவர் என உரைக்கவும் ஏதுவாகிவிடுகிறது. இந்நிலை வாழையடி வாழையாகச் சமுதாயத்திலிருந்து விலக்க முடியாத — விலகாத தவறாக மாறிவிட்டது. அறத்தையும், ஒழுக்கத்தையும் அடிப்படையாக வைத்து, சொல்லுகின்ற இடத்தின் தன்மையறிந்து, குறளின் உரையைக் கொள்ளுதலே கற்றவரின் கடமையாகும். சொல்லும் செயலும் பற்றிச் செந்நாப் போதார் சொல்லும் திறத்தினை அறிந்தால் நடைமுறையில் அவற்றைக்கடைப்பிடிக்கும்

தன்மை நமக்கு நன்கு விளங்கும். முதற்கண் சொல்லின் சிறப்பினைச் சிறிது நோக்குவோம்.

நாட்டை ஆளும் அரசன் முதல், வீட்டில் வாழும் மனிதர்கள் ஈறாகவுள்ள அனைவருக்கும் சொல்லைப் பயன்படுத்தும் வகையினைக் கூறிப்போந்த வள்ளுவர், சொல்லாற்றலின் சிறப்பையுணர்ந்து "சொல் வன்மை" என்ற அதிகாரத்தையே இயற்றியருளினர். சொல்லானது செல்வங்கள் யாவற்றுள்ளும் தனிச் சிறப்புடையது; ஆக்கம் பெருகும் நிலையுடையது; அறனையும் பொருளையும் அடையக்கூடியது; எவ்வாற்றலானும் எதிர்க்க இயலாதது; செயலில் இறங்குவதற்கு உறுதுணை செய்வது என்றெல்லாம் சொற்சிறப்பை யுணர்த்துகிறார். சொல்லுகின்ற சொல்லைப் பிறர் வெல்லுகின்ற நிலை ஏற்படாவாறு திறனறிந்து சொல்லவேண்டும்; நம் சொல்லை விருப்பொடு கூறிப் பிறர் சொல்லின் பயனை அடையவேண்டும்; சுருங்கச் சொல்லி விளங்க வைக்கவேண்டும் என்று கட்டளையிட்டு, அதிகம் படித்தவனாயினும் அழகுற எடுத்துக்கூறும் ஆற்றலிலாதான் மணமிலா மலருக்கு ஒப்பாவான் என்றும் உரைக்கின்றார் வள்ளுவனார்.

வள்ளுவர் நூலாசிரியர் மட்டுமன்றி உரையாசிரியராகவும் விளங்குகிறார். தாம் எழுதிய பாவிலேயே சொல்லுக்குப் பொருள் கூறும் தன்மையைப் புகுத்துவது அறிந்து மகிழ்தற்குரியதாகும். 'அறம்' என்ற சொல்லிற்கு மனத்தூய்மை என்றும், 'இன்சொல்' என்பதற்குக் கருணை கலந்ததும், வஞ்சனையற்றதும், உண்மைப் பொருள் உணர்ந்த உயர்ந்தவர்களின் வாய்ச் சொல்லாக விளங்குவது என்றும் விளக்கமான பொருளை எடுத்துக் கூறுகின்றார் பொய்யில் புலவர். அது போன்று 'சொல்' என்பதற்கும் பொருள் கூறுகின்றார். 'கேட்டாரைத் தம் வயப்படுத்தும் தன்மையும், பகைவரும் விரும்புகின்ற நயமும் அமைந்ததே சொல்லாகும்' எனப் பொருள் கூறுகிறார்.

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

என்பது குறளாகும்.

பல்லாற்றானும் வாழ்வில் பயனளிக்கின்ற சொல் பகையாக மாறுவதையும் பார்க்கின்றோம். சொல்லின் பகை, வில்லின் பகை என இருவகைப் பகைமை உண்டு என்று உணர்த்துகிறார் வள்ளுவர். வில்லின் பகை தனக்குமட்டும் வேதனை தரக்கூடியது;

சொல்லின் பகை தனக்குமட்டுமல்லாமல் தன்னுடைய குடிக்கும், சமுதாயத்திற்கும் தீராத வகையைத் தரக்கூடியது. வில்லின் பகை விரைவில் ஆறுகின்ற புண்ணைப் போன்றது; சொல்லின் பகை என்றும் மறையாத வடுப் போன்றது. ஆகவே வில்லின் பகையைவிடச் சொல்லின் பகையே ஆற்றல் பொருந்தியது என அறிவுறுத்துகின்றார். உழவர்கள் வயலை உழுகின்றார்கள். உழும்போது ஆண்டுள்ள உயிர்கள் அழிந்தொழிகின்றன. வயலில் உள்ள உயிர்களுக்கு உழவர்கள் பகைவர்கள்தானே? இருப்பினும் பாரெலாம் பரிந்தூட்டும் பயன் நிறைந்த தொழிலைச் செய்யும்பொழுது இயல்பாக எழுகின்ற பகையைப் பகைமையாகக்கொள்வதில்லை. நெல்லின் விளைவு காணப் புல்லின் களையினை எடுக்கத்தானே வேண்டும்? பெரும் பயன் கருதி மிகச் சிறு பகைமையை மேற்கொள்ளும் உழவர் பெருமையை—வழியினைப் பகைவர்களும் பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தவே 'சொல்லேருழவர் பகை, வில்லேருழவர் பகை' எனும் அடைமொழியைப் பகைவர்க்கும் அளித்தார் பெருநாவலர். அழுக்காறு, அவா ஆகியவற்றின் காரணமாகப் பகைமையெழாமல், தன்னையும், தன் நாட்டாரையும், தன் மொழியையும், தாழ்விலாப் பண்பாட்டையும் பாதுகாக்கும்போது இயல்பாக ஏற்படுகின்ற சிறு பகைமையே ஏற்பட்டு, விரைவில் பகை மறந்து வாழும் நிலையே ஏற்படவேண்டும் என்று கருதுகின்ற வகையில் பகைவர்களுக்கு உழவர்கள் என்று பட்டம் சூட்டியமை எண்ணி மகிழ்தற்குரியதாகும்.

> "வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
> சொல்லே ருழவர் பகை"

என்பது குறளாகும்.

இதுவரை சொல்லின் சிறப்புணர்ந்தோம். இனிச் செயலின் நிலை காண்போம்.

சொல்வதெல்லாம் செய்வதற்காகவே என்கிற முறையில் 'சொல் வன்மை' என்ற அதிகாரத்திற்குப் பிறகு வினைத் தூய்மை, வினைத் திட்பம், வினை செயல்வகை என்ற செயலின் நிலை குறிக்கும் அதிகாரங்களைக் கூறியிருக்கின்றமை அறிந்து மகிழ்தற்குரியதாகும். மனிதன் தான் செய்யும் செயலால் உயர்வையும் தாழ்வையும் அடைகிறான்; நன்மையையும் தீமையையும் அடைகிறான்; பழியையும் புகழையும் அடைகிறான். ஆகவே செயலானது தூய்மையாகவும், உறுதியாகவும் இருக்கவேண்டும்

என்று கூறி வினை செயல் வகையினை விளக்குகின்றார் வள்ளுவனார். சான்றோர் பழிக்கும் வினையைச் செய்யாது, எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்மையோடு செயலில் இறங்கும் ஒருவன், தனக்கு வேண்டிய பொருளையும், அதற்குரிய கருவியையும், செய்வதற்கேற்ற காலத்தையும், செய்கின்ற தொழிலையும், செய்யப்படும் இடத்தையும் ஐயமற ஆராய்ந்து அறிய வேண்டும் என்றும், செயலால் ஏற்படும் முடிவையும், செய்யும் பொழுது ஏற்படும் இடையூறுகளையும், செய்து முடித்தால் ஏற்படும் பயன்களையும் பார்த்துச் செயல்வேண்டும் என்றும் கூறியுள்ளமை அன்றாட குடும்ப வாழ்க்கை முதலாக, அரசியல் வாழ்க்கை ஈறாகவுள்ள அனைத்து வாழ்க்கைக்கும் பொருத்தந்தானே? இனி இக் கருத்துக்களடங்கிய குறட்பாக்களைக் காண்போம்.

"பொருள் கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்"

என்னும் குறளும்,

"முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்"

என்னும் குறளும்,

செயல் செய்வதன் திறம் முழுமையும் தெளிவுற எடுத்துக் காட்டுவனவாகும்.

மனிதப் பண்பு இல்லாதவனை மரம் என்றும், உலகத்தார் உண்டு என்பதை இல்லை என மறுத்துக் கூறுபவனைப் பேய் என்றும், கல்லாதவனை விலங்கு என்றும் கூறிய வள்ளுவர் பயனில்லாத சொற்களைப் பேசுபவனையும் 'பதர்' என அழைக்கின்றார். விளங்கும் புகழ் இளங்கோவடிகளும் "வெள்ளைக் கோட்டியும் விரைவினில் ஒழிமின்" என அறிவுறுத்துகின்றார். பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேமென்று உள்ளத்தால் உள்ளலும் தீதே என்று எண்ணத்திலே தூய்மை வேண்டும் என்று கூறிய வள்ளுவரின் கருத்து, சொல்லும் செயலும் தூய்மையாக இருத்தல்வேண்டும் என்பதைத்தானே காட்டு

கிறது? ஆகவே பயனில்லாத சொற்களைக் கூறாமல், பயனுடைய சொற்களாக—செயல் செய்வதற்கேற்ற சொற்களாகச் சொல்ல வேண்டும் என்பது தானே விளங்கும். சொல்லும் செயலும் ஒன்றோடொன்று பின்னிக்கிடக்கும் பொருள் என்பதை மறக்க முடியாது—மறுக்கவும் முடியாது.

சமுதாயத்திலே சொல்லுவதைப்போலச் செய்யவேண்டும் என்று வற்புறுத்துவோரும் உண்டு; சொல்வதுபோலச் செய்ய முடியாது என்று வாதிப்போரும் உண்டு. முன்னவர் இப்படித் தான் வாழவேண்டும் என்று வரையறுத்து வாழ்பவர்; பின்னவர் எப்படியாவது வாழவேண்டும் என்ற எண்ணங்கொண்டவர். முன்னவர் தம் கொள்கையை என்றும் நிலைநாட்டுவர்; பின்னவர் சமயத்திற்கேற்றவாறு தம் கொள்கையை மாற்றிக்கொள்வர். முன்னவர் உள்ள உரம் கொண்டவர்; பின்னவர் கோழையுளம் கொண்டவர். முன்னவர் செயற்கரிய காரியங்களைச் செய்வர்; பின்னவர் செயற்குரிய செயல்களையும் செய்யாதவர். முன்னவர் சொல்லும் செயலும் ஒன்றெனெ எண்ணுபவர்; பின்னவர் சொல் வேறு, செயல் வேறு என்று நினைப்பவர். முன்னவரால் வருங் கால சமுதாயம் வாழ்வு பெறும்; பின்னவரால் தாழ்வு ஏற்படி னும் தடுப்பதற்கில்லை. முன்னவர்கள் நல்லவர்களாகவே வாழ விரும்புபவர்; பின்னவர் வல்லவர்களாக மட்டும் வாழ முயல்பவர்.

சொல்லுதல் எளிது; செய்வது அரிது எனக் கூறிய வள்ளுவனார், 'முறைப்படுத்தி இனிமையாகச் சொல்லுகின்ற, வல்லவர்களாகிய நல்லறிஞர்களின் சொற்களைக் கேட்டு விரைந்து செயலில் இறங்கும் உலகம்' என்று சொல்லையும் செயலையும் ஒரே குறளில் இணைத்துக்கூறி நம்மை வியப்பிலாழ்த்துகிறார்.

> "விரைந்து தொழில் கேட்கும்ஞாலம் நிரந்தினிது
> சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

என்பது குறளாகும்.

பகல் முழுவதும் துன்பப்பட்டான் ஒருவன். கொடுமை அவனைக் கொடூரமாகத் தாக்கியது. இரவு நேரத்திலே கொடு

மையை மறந்து உறங்கக் கண்ணயர்ந்தான். கண்ணை மூடுவதற்குள் எண்ண அலைகள் எழுந்தன. கனவு ஒன்றையும் கண்டான். நனவிலே பட்ட கொடுமை கனவிலேயும் தோன்றி வருத்த ஆரம்பித்தது. இறப்பினும் இன்னாத நிலை அவனுக்கு ஏற்பட்டது. இக் காட்சியை நம் கண் முன்னிறுத்தித் தீயவர்களின் தொடர்புபற்றிக் கூறவந்த இடத்திலே சொல்லும் செயலும் வேறுபட்டால் நாம் துன்பமடைவதோடு நாடும் உலகமும் நலிவுறும் என்பதை வலியுறுத்திக் 'கனவினும் இன்னாது' என அவர் கொடுமையை அறிவிக்கின்ற முறையில்,

"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு"

என்ற குறளில் ஐயத்திற்கிடமின்றிக்கூறிப்போந்தார்வள்ளுவனார்.

இதுகாறும் கூறியவாற்றால் எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றையே இயல், இசை, நாடகம் என முத்தமிழாகக் கொண்டனர் என்பதும், குறளின் கருத்திற்கேற்பப் பொருள் காண்டலே பொருத்தமானது என்பதும், சொல்லின் சிறப்புக்கள் இவை என்பதும், வள்ளுவர் உரையாசிரியராகவும் விளங்குகிறார் என்பதும், இருவகைப் பகைமை இன்னது என்பதும், மனிதனிலும் மரம், பேய், விலங்கு, பதர் முதலாயன உண்டு என்பதும், நல்லவர்கள், வல்லவர்களுக்குள்ள வேற்றுமைகள் இவை யென்பதும், வினைத் திட்பத்தைத் தெரிவிப்பதற்காகவே 'செய்வது அரிது' எனக் கூறினாரேயன்றி, சொல்வதையெல்லாம் செய்ய முடியாது எனக்கூறும் வெற்றுரையாளரின் கொள்கைக்கேற்பக் குறள் செய்தாரில்லை என்பதும், சொல்லும் செயலும் வேறுபட்டால் சமுதாயமே சீர்குலைந்துபோகும் என்பதும், உள்ளம், சொல், செயல் மூன்றையும் ஒன்றுபடுத்தி வாழ வள்ளுவர் கூறிய வழியில் நடக்கவேண்டும் என்பதும் இனிது விளங்கும். அறத்தை நம்பவேண்டும்; திருக்குறளைப் படிக்கவேண்டும்; வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டும். இவையே நாம் வாழும் நெறியும் முறையுமாகும்.

தமிழில் தாவரம்.

கு. சீநிவாசன், M. Sc.,
தாவர விரிவுரையாளர், அண்ணாமலைநகர்.

கருவிளை : செருவிளை—

கருங்காக்கணம் எனவும் கருங்காக்கட்டான் எனவும் வழங்கப்படுவன கருவிளை ஆகும். வெண்காக்கணம், வெண் காக்கட்டான் எனப்படுபவை செருவிளை ஆகும். ஆசிரியர் நச்சினார்க்கினியர் செருவிளை என்பதற்கு வெண்காக்கணம்பூ எனவும், கருவிளை என்பதற்கு கருவிளம்பூ எனவும் (குறிஞ். 68) உரை கூறினார். நற்றிணை உரையாசிரியர் கருவிளை என்பதற்குக் கருங்காக்கணம் என்று உரை கண்டார். (நற். 221) கருவிளை ஒருசிறு கொடியாகலின் கருவிளம் எனப்படும் விளாமரமாகாது.

கருவிளை முரணிய தண்புதல் (அகம்—255)
புதல, பீலி ஒண்பொறிக் கருவிளை (குறுந்—110)
மணி கண்டன்ன மாநிறக் கருவிளை
ஒண்பூந் தோன்றியொடு தண்புதலணிய (நற்—221)
புல்லிய கொம்புதா னோர்கருவிளை பூத்ததேபோல்
ஒல்கிய கொம்புபற்றி யொருகணால் நோக்கி நின்றாள்
(சிந்—319)

தாவர நூலில் கிளைடோரியா டர்னடியா (Clitoria ternatea Linn) எனப்படுகின்றது. இது அவரை, துவரை, குன்றி முதலியவற்றை உட்கொண்ட பாப்பிலியோனேசி (Papilionaceae) என்ற தாவரக் குடும்பத்தின்பாற்படும். செருவிளை தாவர நூலில் கருவிளையின் வகைப் பிரிவெனவே கருதப்படுகின்றது. செருவிளை என்ற கிளைடோரியா டர்னடியா உள் வகை (Clitoria ternatea variety) வெண்ணிறமான பூவினை உடையது. இப்பூ நிறம் தவிர மற்றெல்லாவகையிலும் செருவிளை கருவிளையை ஒத்ததே. கருவிளையாகிய கருங்காக்கணமும், செருவிளையாகிய வெண்காக்கணமும் பற்றுக்கொம்பொன்று பற்றிச் சுற்றி வளரும் இயல்பின. இவை புதரின் மேலேறிப் படர்தலும் உண்டு.

கருவிளையின் கொடி வன்மையற்றது. இலை ஐந்து முதல் ஏழு வரை சிற்றிலைகளை உடையது. சிற்றிலைகள் சற்று நீண்ட முட்டை வடிவானவை. இலையடிச் செதிலும் (Stipule) பூவடிச் செதிலும் (Bract) மிக மென்மையானவை. பூவின் புறவிதழ் ஐந்தும் சற்று நீண்டு இணைந்திருக்கும். அகவிதழ் ஐந்தும் மூவகையானவை. பூவின் மேற்புறமிருக்கும் அகவிதழ் பெரியதாகவும், நுண்ணிய பொறிகளை உடையதாகவும் கவினுறத் தோன்றும். பூவின் இருபக்கங்களிலும் உள்ள அகவிதழ் இரண்டும் சற்று அகன்று சிறகு போன்றிருக்கும். பூவின் அடிப்புறத்துள்ள இரு சிறு அகவிதழ்களும் ஒன்றுயிணைந்தும், தோணி

போன்று வளைந்துமிருக்கும். தாதிழைகள் (Stamens) பத்தும் அடியில் ஒன்றாயிணைந்து ஒரே தன்மையான தாதுப் பைகளைச் சுமந்து நிற்கும். பூவின் நடுவிலமைந்த கரு ஓரறையினதாய் பல சூல் (Ovule) பெற்றிருக்கும். கருவிளை, செருவிளை இரண்டும், தும்பி, சுரும்பு முதலியவற்றால் பிற மகரந்தச் சேர்க்கையுற்று சூல் முதிர்ந்து விதைகளாகும். கருவிளையின் வண்ணநொசி எண் X = 8 என 1953-ஆம் ஆண்டில் கண்டு சொல்லப்பட்டது. இதனை ஆங்கிலத்தில் தும்பிப் பட்டாணி (Butterfly Pea) என்றழைப்பர். கருவிளை மலர் மயிற்பீலியை ஒத்துக் கண் போன்றிருக்கும். இதனை,

பீலி ஒண் பொறிக் கருவிளை (குறு—110)

தண்புனற் கருவிளைக் கண்போன் மாமலர்
ஆடுமயிற் பீலியின் வாடையொடு துயல்வர (நற்—262)

கண்ணெனக் கருவிளை மலர (ஐங்—464)

நீர்வார் கண்ணிற் கருவிளை மலர (அக—294)

என்றெல்லாம் நந்தமிழ்ப் புலவர் பாடுகின்றனர்.

செருவிளை, கருவிளை ஆகிய இவை வெப்பம் மிக்க பகுதிகளில் நன்கு வளர்கின்றன. இமயம் முதல் தமிழ்நாடு வரையிலுமுள்ள நம் நாட்டிலும், பர்மா, இலங்கை, மலாக்கா முதலியவிடங்களிலும் காணப்படுகின்றனவென்பர். கருவிளை உள்ளிட்ட கிளைடோரியா (Clitoria) இனத்தில் இருபத்தேழு வகைகள் (Species) உள்ளன என்றும், நம் நாட்டில் ஐந்து வகைகள் வளர்கின்றன என்றும் தாவர நூல் கூறும்.

கருவிளை மலர் வாடைக்காற்றால் அலைப்புண்ணப் படுதலைக் கிள்ளி மங்கலங்கிழார் ஒரு குறுந்தொகையில் நெஞ்சு பிணிக்கும் வகையில் கூறுகின்றார்:

வாரா ராயினும் வரினும் அவர்நமக்கு
யாரா கியரோ தோழி நீர
நீலப் பைம்போ துளரிப் புதல
பீலியொண் பொறிக் கருவிளை யாட்டி
நுண்முள் ளீங்கைச் செவ்வரும் பூழ்த்த
வண் ணத்துய் மலருதிரத் தண்ணென்
றின்னு தெறிதரும் வாடையொ
டென்னு யினள்கொ லென்னு தோரே. (குறுந்—110)

இது பருவங்கண்டழிந்த தலைவி தோழிக்குக் கூறுவதாக அமைந்துள்ளது. தலைமகன் குறித்த பருவம் வந்ததெனினும் அவன் வரவில்லையே என்ற துயர் ஒருபுறம். அவன் வருவதாகக் கூறிய பருவத்து வாராமையின் அவன் கூற்று பொய்ப்பட்டதே என்ற பெருந்துயர் மற்றொரு புறம். வாடை எறிதலின்

ஆற்றொணாது அலம் வரல் மற்றொரு புறம். அரும்பனி அற்சிரம் தாங்காது அல்லலுழப்பள் என்பதை அவன் உள்ளினனல்லனோ என்று உன்னுதொறும் படருஞ்செல்லல் பிறிதொருபுறம் இங்ஙனமாகத்தான் அல்லலுழத்தற்குக் காரணமான அவன் இப்பருவத்திற்குப் பின் வருதலும், வாராதிருத்தலும் ஒன்றே என்று தலைவி, தோழியிடம் உரைத்து அழுங்குவளாயினள்.

வாடைக்காற்று தன்னியல்பால் குளிர் தரும். தண்ணென்று என்றவதனால் தண்மை ஆற்றொணா வளவிற்கு மிக்குள்ளதென்பதும், இன்னாது என்றவதனால், தண்மை அவன் அணித்தாயினன்று இனிதெனினும், நீங்கியவழித் தெறுமாதலின் இன்னாதென்பதும், எறிதரும் என்றவதனால் அசைந்து தவழும் புலவர் நாவில் பொருந்திய தென்றல் போலாது வலிய வீசிற்றென்பதும் பெற்றாம். அன்றி இவ்வாடைக்காற்று நீரிலுள்ள நீலப் பூக்களை உளரியும், புதலிடத்துப் படர்ந்து பூத்த கருவிளை மலரை ஆட்டியும், முள்ளுடன் உள்ள ஈங்கை மலரை உதிர்த்தும் எறிதரும் என்புழி புதலாகிய பற்றுக்கோடு கருவிளை மலருக்கு உள்ளது; நீராகிய பாதுகாவல் நீலப் பூவிற்கும், நுண்முள்ளாகிய பாதுகாவல் ஈங்கை மலருக்கும் இருக்கின்றன; ஆதலின் அவற்றை வாடைக்காற்று முறையே உளரி, ஆட்டி, உதிர்த்து வீசிற்று; தனக்குப் பற்றுக்கோடும் பாதுகாவலுமாக விளங்கும் அவன் இல்லாமைகண்டு இன்னாது உயிரையுந்தொட்டு எறிதருமென்றாள். மற்று, நீலத்தைப் பைம்போதெனவும், கருவிளையைப் பீலியொண்பொறி எனவும், ஈங்கையைச் செவ்வரும்பூழ்த்த வண்ணத்துய்ம் மலரெனவும் கூறியவதனால் இளமை, மென்மை, அழகு ஆகிய இவைகளைத் தனித் தனியே பெற்ற இப்பூக்களைத் தாக்கிய வாடை இவையனைத்தையும் ஒருங்கே பெற்ற தலைவியை என் செய்யுமோ என்று எண்ணாதான் வரினும், வாரானாயினும் அவன் யாரோ என நினைத்தாள் என்பதும் ஆகும். வாடைக் காற்று தலைவியின் அருமை கருதாமல் செவ்வி எண்ணாமல், கவின் உன்னாமல் எறிதரும் என்பதும் இவையிற்றைப் பருவம் வருந்துணையும் காத்து நின்றவள், இவ்வாடையால் இழக்கநேர்ந்த தென்பதும் இச்செந்நலமெல்லாம் தனக்கும், தலைவற்குமாகவாக்கி ஆற்றொணாத் துயர் தந்து இவ்வாடை எறிதருமென்பதும் புலனாதல் காண்க. இவையொழிந்து தானும் இறந்துபட்ட பின் அவன் வரினும், வாரானாயினும், அவன் நொதுமலாளனன்றி அன்புடையனல்லனென்பாள். அவர் யாராகியரோ என்றாள். நாமில்லாத தனிமையால் இவ்வாடைக் காற்றினால் வருத்தமுற்று என்னாயினளோ என்று ஒரு தூது விட்டுத் தனது அன்புடை நெஞ்சத்தைப் புலப்படுத்தாத அவன், வாடை கொன்றொழித்தபின் வரினும் தனக்கு உறவினனல்லன் என்றாள் என்பது குறிப்பு.

24 MAR 1960

விசயாலயன் எடுத்த துர்க்கைக் கோயில்.

வித்துவான், சி. கோவிந்தராசன்,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

சோழமன்னர்கள் தலைநகரமாகக்கொண்டு ஆண்ட இடங்களுள் இன்று வரலாற்றுச் சின்னங்களுடன் தெளிவாக விளங்குவது தஞ்சைமா நகரமேயாகும். இத்தஞ்சை கி. பி. ஏழு, எட்டாம் நூற்றுண்டளவில் தென்னகத்தின் பெரும்பகுதியைத் தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்கிய பல்லவப் பேரரசுக்கு அடிக்கடி அடங்கிய பகுதியாகி, அவர் தம் ஆணைக்கடங்கியவரும் களப்பிரரின் வழிவந்தவருமாய முத்தரைய மன்னர்களால் காக்கப்பட்டு வந்துளதென்பதனை வரலாறுகள் கண்டுள்ளன. முத்தரைய மன்னர்கள் பல்லவர்கள் வெல்லும் படியாக அவர்களுக்குத் துணைபூண்டு பாண்டியனுடைய போர் முனையைக் கெடும்படிச் செய்தார்கள் என்பதை 'பல்லவன் வெல்லத் தென்னன் முனையைக் கெடச் சென்ற மாறன்' (சுவறன் மாறன்) என்னும் செந்தலைக் கல்வெட்டுத்தொடர் நன்கு உணர்த்துகின்றது. இவ்வாறு பாண்டியருடன் அவர்கள் பகைத்துப் பல போர்களியற்றி வந்த காலத்தில், பழையாறை நகரையும் அதனைச் சார்ந்த பகுதிகளையும் வலியிழந்து பல்லவருக்கடங்கிய நிலையில் காத்துவந்த பண்டைச் சோழ மரபின் வழிவந்தவர்கள், தமக்குரிய சோழ மண்டலத்தைக் கைப்பற்றக் காலங்கருதியிருந்தனர் என்றும், கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் இடைக்காலத்தில் தக்க வாய்ப்பு ஏற்படவே சோழன் விசயாலயன் என்பான் அப்பொழுது தஞ்சையை ஆண்ட முத்தரைய மன்னனைத் தாக்கித் தஞ்சைமா நகரைக் கைப்பற்றிக்கொண்டான் என்றும், இக்காலம் கி. பி. 846 என்றும் வரலாறுகள் தெளிவுபடுத்தியுள்ளன. இவ்வாறு குன்றிக்கிடந்த சோழ இராச்சியத்தை மீண்டும் நிறுவி அதனைச் செம்மை செய்தவன் விசயாலய சோழனே என்பது வரலாற்று ஆராய்ச்சியாளர் யாவராலும் கருத்து வேறுபாடின்றி ஒப்புக்கொள்ளும் செய்தியாகும்.

விசயாலய சோழன் தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு முப்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்கிறுன். இவனது ஆட்சிக் காலத்தில் இவனடைந்த வெற்றிக்குச் சின்னமாகத் தஞ்சையில் நிசும்பசூதனி என்னும் பெயருடைய துர்க்கைக்குக் கோயிலொன்று எடுத்துள்ளான் என்பதைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் உணர்த்துகின்றன.

வரலாற்றுச் சுவட்டில், கி. பி. எட்டாம் நூற்றுண்டிலிருந்து சிறப்புற்றதாகவும், பெருநகராகவும், தலைநகராகவும் இருந்துவரும் தஞ்சைமா நகரில் விசயாலயனுல் எடுக்கப்பட்டுள்ள துர்க்கைக்கோயில் யாண்டுளது என்பதனை இதுகாறும் குறித்தறிதற்கிடனின்றி வந்துளது.

இவ்வையத்தினைப் போக்க முயன்ற வரலாற்றறிஞருள் முதலாவதாக முயன்றவர் திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை பி.ஏ., பி.எல்., அவர்களேயாவர். இவர், தஞ்சை அரசர் திருக்கோயில் கண்காணிப்பாளராக இருந்தஞான்று, தஞ்சை இராசராசேசுவரத்தின் பெருமையினைத் தமிழ் மக்களும் பிறநாட்டவரும் அறிய எடுத்துக் கொண்ட முயற்சிகளுள் ஒன்ருக இராசராசசோழன் சதயவிழா வெளியீடாக 2–11–1938ல் வெளியிட்ட "இராசராசேசுவரமும் பிறசோழர் கோயில்களும்" என்னும் சிறந்த நூலுள், விசயாலயன் எடுத்த துர்க்கையின் கோயில் பற்றிய தமது ஆய்வுரையினைக் குறித்துள்ளார். அதில் "தஞ்சாவூரில் சோழ அரசை நிலைநாட்டிய விசயாலயன், அங்கே துர்க்கைக்கு நிசும்பசூதனி என்ற பெயரால் கோயில் சமைத்தான். அஃது இன்னதெனக் குறிப்பிட முடியாதிருப்பினும் தற்போதைய தஞ்சை விண்ணாற்றங்கரைப் பாதையில் உள்ள கோடியம்மன் கோயிலாகவோ, தஞ்சைக் கீழ்வாயில் கோட்டத்துப் பூமாலை ராவுத்தன் கோயிலுக்கு அணித்தாயுள்ள காளியம்மன் கோயிலாகவோ அமையலாம்" என்று கூறியுள்ளார். இக்கருத்தினையே இவர் பின்னர் வெளியிட்ட "சோழர் கோயிற்பணிகள்" என்ற நூலுள்ளும் வெளியிட்டுள்ளார்.

'பிற்காலச் சோழர் சரித்திரம்' என்ற தலைப்பில் சோழர்களது வரலாற்றைத் தெளிவாக எழுதிய, காலஞ்சென்ற, வரலாற்ருசிரியர் T. V. சதாசிவ பண்டாரத்தாரவர்களும், 'விசயாலயன் சற்றேறக் குறைய முப்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்திருத்தல் வேண்டும். இவனது இத்தகைய நீண்ட ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த செய்திகளை நன்கு அறிதற்குரிய கருவிகள் இக்காலத்தில் கிடைத்தில. இவன் தஞ்சைமா நகரில் துர்க்கைக்கு ஒரு கோயில் எடுப்பித்தான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் உணர்த்துகின்றன. நிசும்பசூதனி என்பது அவ்வம்மையின் பெயராம். இந்நாளில் அக்கோயில் யாண்டுளது என்பது தெரியவில்லை. ஒருகால் அது தஞ்சைமாநகரிலுள்ள காளிகோயில்களுள் ஒன்ருக இருத்தல் கூடும்' என்றே கூறியுள்ளார்.

மற்றும், சோழர் வரலாற்றினை வரைந்துள்ள ஆசிரியர்கள் 'விசயாலயன் முத்தரையரைவென்று தஞ்சாவூரைக்கைக்கொண்டான். அங்கு, துர்க்கைக்குக் கோயில் ஒன்றைக் கட்டினுன் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் செப்புகின்றன. (S. I. I. Vol. 3, No. 205, Verse 46.) என்ற அளவில் கூறியுள்ளனர்.

இவ்வாருக, சோழன் விசயாலயன் தஞ்சையில் எடுத்த துர்க்கைக்கோயில் எதுவென்று கண்டறிதற்கியலாது இருந்து வந்துளது. தஞ்சையில் பழமையுடன் அரசர்களால் உண்டாக்கப் பட்டதாகக் கூறப்பெறும் காளி கோயில்கள் எனக்குத் தெரிந்த அளவில் ஒன்பது உள்ளன. அவற்றுள் எழுந்தருளியுள்ள தெய்வங்கள் முறையே நந்திமாகாளி அம்மன், கோடியம்மன்,

குந்தாளம்மன், சம்வர்த்தனி அம்மன், செல்லி அம்மன், வடபத்திர காளி அம்மன், வாஞ்சி அம்மன், உக்கிரகாளி அம்மன், மாரி அம்மன் என்ற பெயர்களுடன் இப்பொழுது விளங்குகின்றன. சென்ற சில ஆண்டுகளாக ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் மேற்குறித்த காளி கோயில்கட்கெல்லாம் சென்று, அம்மையின் திருமேனி அமைந்துள்ள சிற்பச் சிறப்பு, கோயிலமைப்பு, கருவறை அமைப்பு, சூழ்நிலை, தொன்மை, ஆகியவற்றைக் கண்டறிந்ததுடன், அவ்வக்கோயிலுக்குத் தொடர்புடைய பெருமக்களையும், பூசாரியரையும் கண்டு கோயிலின் வரலாறுகளையும் கேட்டறிந்து வந்தேன். அதுபோது, விசயாலயன் எடுத்த துர்க்கைக்கோயில் ஒருக்கால் கிடைப்பதாயினும், அதனால் வரலாற்றுப் பயனென்னவென்று என்னை வினவியவரும் உண்டு. செல்லாத காசிலிருந்து இடிந்த சுவரும், சிதைந்த சிற்பமும் வரலாற்றுண்மைக்கு இலக்காகி அக்கலையை வளர்க்கும்போது, விசயாலயன் எடுத்த துர்க்கைக்கோயிலைக் கண்டறிவதும் வரலாற்றுள் தொடர்ந்து வரும் ஐயமொன்றினைப் போக்கும் அளவுடையதென்னும் அமைதியுடன், மேலும் முயன்று அதன் பயனாக யான் கண்ட உண்மையினையே இக்கட்டுரையின் வழியாக வெளியிடவும் துணிந்தேன். முதலாவதாக,

திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளையவர்கள் கருதிக்கூறியுள்ள இரண்டு காளி கோயில்களைப் பற்றிய ஆய்வுரையினைக் கூறுவதே பொருந்துமென நினைக்கிறேன். தஞ்சைக்கு வடக்கு எல்லையாக வுள்ள விண்ணாற்றங்கரைக்கு வடக்கு நோக்கிச் செல்லும் நேர்ச்சாலை யின் இடையே இரண்டு ஊர்ப்பகுதிகள் உள்ளன. முதலில் உள்ளது வடவாற்றின் வடகரையிலுள்ள கருந்திட்டைக்குடி, "தஞ்சைப் புறம்படி கருந்திட்டைக்குடி, கருந்திட்டைக்குடியான குலோத்துங்க சோழநல்லூர்" என்று கல்வெட்டுகளிற் கூறப்பெறுவதும் இன்று கருந்தட்டாங்குடி என்று முறைதவறி அழைக்கப்படுவது மாகிய கருந்திட்டைக்குடியாகும். அடுத்து வடக்கே உள்ளது கருந் திட்டைக்குடியான சுங்கந்தவிர்த்த சோழநல்லூரென்று கல்வெட்டு கள் புகலுகின்றதும் சுங்கந்திடல் என்று இதுபோது குறைத்து அழைக்கப்படுவதுமாய பகுதியாகும். இரண்டாவதாகக் குறிக்கப் படும் சுங்கந்திடலை, மேற்குறித்த நேர்ச்சாலை மேற்கு எல்லையாகக் கடக்கும் இடத்தில், சாலையின் மேற்புறம் அமைந்துள்ள பழமையான கோயிலே ஆய்வாளர் முதற்கண் குறித்துள்ள கோடியம்மன் கோயிலாகும். இக்கோயில் இயல்பான தரைமட்ட அளவில் ஆதியில் எழுப்பப்பட்டதாயினும், அருகிலுள்ள வெண்ணாற்றின் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட தாக்குதல்களுக்கு அடிக்கடி உள்ளாகியதால், சாலையின் உயர்வையொட்டிக் கோயிலைத் திருப்பணி செய்துள்ளனர். இக்கோயிலில் எழுந்தருளியுள்ள அம்மையின் திருமேனி அமர்ந்த பாங்கிலுள்ள சுதைவேலைப்பாடுடையதாகும்.

இக்கோயில் அமைந்துள்ள பகுதியாகிய சுங்கந்தவிர்த்த சோழ நல்லூர், திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மைகொண்டான்

என்னும் அரசனுடைய காலத்தில் (கி. பி. 12-ஆம் நூற்றுண்டளவில்) பிர்மதேயமாகவும் திருவிடையாட்டமாகவும் பங்குசெய்து கொடுக்கப் பட்டதாகக் கூறும் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி பகுதி-I பிரிவு-Iலும், பகுதி-II பிரிவு-Iலும் முறையே கூறப்பெறும் கல்வெட்டு களில் மேற்குறித்த சிற்றூர்க்கு எல்லை குறிக்கப்படுகிறது. அதில் மேற்கு எல்லையைக் குறிக்கும்பொழுது "சுங்கந்தவிர்த்த சோழ நல்லூர்க்கு...மேல்பாற்கெல்லை கொடிவனமுடையாள் பெருவழிக்குக் கிழக்கும்" என்று திட்டமாகக் குறிக்கப்படுகிறது.

இன்றும் கல்வெட்டிற் கூறப்பெறும் எல்லைகளோடு கூறப்படும் நிலப்பரப்பு உள்ளவாறு அமைந்திருப்பதால், எல்லையாகச் சொல்லப் பட்ட கொடிவனமுடையாள் பெருவீதி, சிலவாண்டுகட்கு முன் வரையில் இராசவீதி என்று அழைக்கப்பட்டமையால், அவ்வீதியில் எழுந்தருளியிருக்கும் அம்மையின் பெயரால் முன்னர் கொடிவன முடையாள் பெருவீதி என்ற பெயரைப் பெற்றிருந்ததென்பது இயல்பேயாம். எனவே கொடிவனமுடையாள் என்னும் கோடி யம்மன் கோட்டம் விசயாலயனுல் எடுக்கப்பட்டதல்ல வென்பது போதரும்.

இரண்டாவதாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது தஞ்சை கீழ் வாயிலை அடுத்துக் கிழக்கேயுள்ள பூமாலைராவுத்தன் கோயிலைச் சார்ந் துள்ள காளி கோயிலாகும். இக்கோயிலில் எழுந்தருளியுள்ள காளியின் திருவுருவம் எழுந்த நிலையில், இன்று வங்காள மக்கள் வணங்குவதும், விசயநகரப் பேரரசர்கள் ஆங்காங்கு பிரதிட்டை செய்திருப்பதுமாகிய மாகாளியின் தோற்றத்தில் மிக்க பெருமிதக் காட்சியோடு விளங்குகிறது. சிற்பச் சுவட்டில் பழமை காணக்கிடைப் பினும் இடம், சூழ்நிலை, கோயிலமைப்பு ஆகியவற்றில் எத்தகைய பழமையான சின்னத்தினையும் காணுதற்கில்லை. தஞ்சையை ஆண்ட மகாராட்டிய மன்னர்கள் சிறியதாகவும் குறிப்பிட்ட சுதை வேலைப் பாடுகளுடனும் தஞ்சை மாவட்டத்தில் ஆங்காங்கு செங்கற்றிருப் பணியாக எடுத்துள்ள நூற்றுக்கணக்கான காளி கோயில்களின் அளவையொத்து, கருவறையும், விமானமும் காட்சியளிக்கின்றன.

கோனுட்டிலுள்ள நாரத்தமலையின் ஒரு பகுதியாகிய மேலை மலையின்மீதும், பனங்குடி, காளியாப்பட்டி ஆகிய இடங்களிலும் விசயாலயன் தம் பெயராலும், பொதுவாகவும் சிவபெருமானுக்கு எழுப்பியுள்ள கற்றளிகள் இன்றும் பழமையுடன் ஆங்காங்கே நின்று விளங்குகின்றன என்பதை அறுதியிட்டுக் கூறும் வரலாறுகள் வெளி வந்த பின்னர், விசயாலயன் தனது தலைநகரில் தான் கொண்ட வெற்றிக்குச் சின்னமாகவோ, அன்றித் தனது குடித்தெய்வமாக வழி வழி வந்த துர்க்கை வெற்றிக்குரிய தெய்வமாதலினுல், அவ்வம்மையின் திருவருளினுற்றுன் தான் வெற்றியடைய முடிந்த தெனும் குறிப்பினுலோ எடுத்த நிசும்பசூதனியின் கோயிலும் கற்றளி யாகவே அமைந்திருக்க வேண்டுமென்னும் கருத்தும் வலியுறு

கின்றது. அன்றியும் தஞ்சையில் நாயக்க மன்னரின் காலத்தில் கட்டப்பட்ட இராசகோபாலசுவாமி கோயிலின் திருச்சுற்றிடத்தில் அவர்களது ஆட்சிக் காலத்தில் தொடங்கி நடந்ததாக அறிஞர்கள் கூறும் சிற்ப சாலையில் எஞ்சியதாக நிற்கும் பலதிறப்பட்ட காளி உருவங்களும் இவ்வம்மையின் திருவுருவையொத்த பாங்கில் உள்ளன என்பர்.

அடுத்து மூன்றாவதாக ஆய்வாளர்கள் கூறும் காளி கோயில், தஞ்சையின் தெற்கு எல்லை வரம்பில், வல்லம் செல்லும் சாலையில் அமைந்துள்ள செங்களாச்சி அம்மன் கோயிலாகும். இவ்வம்மையின் திருந்திய பெயர் சிங்கள நாச்சியார் என்பதாகும். இவ்வம்மையின் வரலாறு முதல் இராசராசனின் வாழ்க்கை வரலாற்றுள் இடம் பெற்றுள்ளமையால் அதனைப் பிறிதொரு கட்டுரையிற் கூறவிழைந்து, ஈண்டு இவ்வம்மையின் பெயர், கோயில், சூழ்நிலை இவற்றால் விசயாலயன் எடுத்த துர்க்கைக் கோயிலன்று என்ற அளவில் கூறுதல் நன்றாம்.

இவ்வாறாக அறிஞர் கருதிய மூன்று கோயில்களும் விசயாலயன் எடுத்தற்குரியதாகக் காணுதற்கியலாவண்ணம் ஒவ்வொன்றும் உரிய பெயருடனும் அமைப்புடனும் விளங்கி வரும்போது, நிசும்பசூதனிக் குரிய கோயில் யாதாயிருக்குமென்று காணும் அவா மிகுவதாயிற்று.

தஞ்சையின் வரலாற்றினுக்கு இலக்காகக் கூறப்பெறும் இடங்களை இயன்றபோது யான் நேரிற் கண்டுவருங்கால், தஞ்சைக்கு கீழ்ப்பகுதியாகவும் எல்லையாகவும் கல்வெட்டுகளில் கூறப்படும், தஞ்சாவூர் நந்தவனப் பற்று, மும்முடிச்சோழன் திருமதில், தஞ்சாவூர் பலதளிப்பற்று ஆகியவைகளை இன்றும் காணமுடிந்தது. இப்பகுதிகள் தஞ்சையின் வடக்குப் பகுதியில் ஓடும் வடவாற்றின் இருமருங்கும் இடத்திற்கேற்ப அமைந்துள்ளன. வரலாற்று நோக்குடன் இப் பகுதியைத் துருவிக்காணும்போது, இவ்வாற்றின் தென்கரையில் இடத்திற்கு ஏற்ற அமைப்பில் நெடிதாக நெளிந்து செல்லும்படியான புறமதில் ஒன்று காட்டரணைச் சார்ந்து இருந்ததென்பது புலனாகிறது. இம்மதிலின் கிழக்குப் பகுதியே மும்முடிச்சோழன் திருமதில் என்று பெயர் பெற்றிருக்கவேண்டுமென்பதை அப்பகுதியில் தஞ்சாவூர் நந்தவனப்பற்று அமைந்திருப்பதைக் கொண்டு உறுதிகொள்ளற் கியலுகின்றது. இப்பகுதியே, கருவக்காடு, கரம்பை, அம்மா தோட்டம் என்று இப்பொழுது அழைக்கப்படுவதாகும். இப்பகுதியைச் சார்ந்த குலாலர் தெருவின் மேற்குப் பகுதியாகவும், வடவாற்றின் தென்கரையாகவும் உள்ள, மேலேகண்ட பூமரத்தான் கோயிலுக்கு நேர் கிழக்காகவும் அண்மையிலும் உள்ள உக்கிரகாளி அம்மன் கோயிலைக் காணலானேன்.

இக்கோயிலின் பழமை பலமுறை மாற்றப்பட்டுள்ளது. மூலத் தெய்வமாக விளங்கிய காளியின் திருவுருவத்துடன் பல பழமையான திருவுருவங்கள் செம்மையில்லாத நிலையில் கோயில் சுவரில்

ஆங்காங்கு, சார்த்தி வைக்கப்பட்டிருந்தன. பல்லவர்கால சிற்பச் சுவடுகள் தெள்ளத்தெளிய அச்சிற்பங்களில் விளங்குகின்றன. கோயில், தஞ்சை அரசர் கோயிற்கண்காணிப்புக்குட்பட்டு இருந்து வருகிறது. கண்காணிப்பாளரிடம் இச்சிற்பங்களைப் பற்றி யான் வினவியபோது, இன்றுள்ள காளி கோயிலுக்கு முன்னருள்ள வடவாற்றின் படுகையில் குலாலர் மண் எடுத்தபோது, அடியில் பெரியதொரு கற்றளியின் அடிப்படை இருந்ததென்றும், அப்பகுதியில் புதைபொருளாகக் கிடைத்த சிற்பங்களே இவைகளென்றும், இவற்றுள் செம்மையாக இருந்த நாரிபாகர், உமையம்மை ஆகிய அழகிய சிற்பங்கள் தஞ்சைக் கலைக்கூடத்தில் இடம் பெற்றுவிட்டன வென்றும் கூறினர்.

இவ்வாறு புதைந்து கிடக்கும் கற்றளியினைக் கொண்டும், காளி கோயிலின் அடிப்படையினைக்கொண்டும், வடவாற்றின் வெள்ளத்தால் ஒரு பெரிய சிவன் கோயிலும், காளி கோயிலும் ஒரு காலத்தில் சிதைந்திருக்க வேண்டுமென்பதும், காளி கோயில் மட்டும் இயன்ற அளவில் ஊர்ப் பொதுமக்களால் சீர்திருத்தப்பட்டிருக்கிறதென்பதும் புலனுகின்றன.

புதைபொருளாகக் கிடைத்துள்ள சிலைகளுள் துர்க்கையின் சிலையுடன் வேறுபட்ட பெண் தெய்வங்களின் சிலைகளும், விநாயகர் திருமேனியும் இருக்கின்றன. இவைகளைக்கொண்டு நோக்குமிடத்து சிதைந்து மறைந்துள்ள கற்றளியின் ஒரு பகுதியாக மிக உயர்ந்த நிலையில் உக்கிரகாளி அம்மன்கோயில் அமைக்கப்பட்டிருக்கிற தென்பதும் நன்கு புலனுகிறது. மற்றும் இக்கோயிலைச் சார்ந்து, ஒரு கோயிலுக்கு அங்கமாக விளங்கும் திருக்குளமும் அமைந்து இன்றளவும் நிற்பது குறிப்பிடத்தக்கது.

உக்கிரகாளியம்மன் திருவுருவம் ஒரு காலத்தில் கோயில் சிதைவடைந்தபோது சிதைவு பெற்றதால், அதனை முற்பகுதியில் அமைத்து வைத்து, வேருெரு காளியம்மையின் திருவுருவத்தை கருவறையுள் ஏற்படுத்தியுள்ளனர். பழமையும் சிற்பத்திறனும் மிக்குவிளங்கும் காளியின் திருவுருவம் மிக்க மேன்மையுடன் விளங்கு கின்றது. ஐந்தடிக்கு மேலான உயர அளவில் அமர்ந்தபாங்கில் விரித்த சடைமுடியுடன் வெகுளியுடன் வெறித்து நோக்கும் பாங்கில், நான்கு திருக்கரங்களுடன், அழகிய மார்பில் தலைமாலை அழகிட, உடுக்கையொத்த இடையில் உதரபந்தனம் இருந்து அழகை மேலும் விளக்க, தமது இரண்டு பாதங்களுள் தூக்கி மிதிக்கும் பாங்கிலுள்ள வலது பாதத்தின்கீழ் ஒரு வீரனும், ஊன்றி மிதிக்கும் இடது பாதத்தின்கீழ் ஒரு வீரனும் நசுக்கப்படும் மாட்சியுடன் வலது கைகளுள் எடுத்த கரத்தில் திரிசூலம் நின்று இலங்க, அம்மை எழிலோடு விளங்கும் சிற்பத்திறனின் காட்சி காணற்கினியது.

வடமொழியிலுள்ள பிரமாண்ட புராணத்திலிருந்து மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டதாக கி. பி. 1893ல் அச்சியற்றப்பட்டிருக்கும் தஞ்சை புராணத்தில் உக்கிரமாகாளி வடிவில், உமாதேவி தஞ்சன், தாரகன் என்னும் இரண்டு வீரர்களைக் கொன்று, பராசர முனிவன் விருப்பத்தை நிறைவேற்றியதாகக் கூறப்பட்டுளது. புராணச் செய்தி யாயினும் அதனுள் வரலாற்றுக் குறிப்பு இல்லாமலும் இல்லை.

மிக்க புகழோடு வழிவழி வந்த சோழ மரபினை மங்கும்படிச்செய்த பல்லவர்களையும், அவருக்கு உட்பட்ட முத்தரைய மன்னர்களையும் விசயாலயன் உள்ளிட்ட சோழர்கள் பகைவராகக் கருதியிருந்தது இயல்பேயாம். அக்காலத்தில், தஞ்சையை ஆண்ட முத்தரையரை விசயாலயன் வென்றது வெற்றிக்குரிய தெய்வத்தின் திருவருட்டுணை யென்று கொண்டிருக்கலாம் என்று முன்னரும் கூறினும். எனவே, அவன் கொண்ட வெற்றிக்குச் சின்னமாகவே துர்க்கையின் உருவமும் செய்யப்பட்டுள்ளது என்பதை மேற்குறித்த அம்மையின் திருவுருவ அமைப்பினல் அறியலாம்.

துர்க்கை மிக்க கோபத்துடன் தனது பாதங்களில் இருவரை மிதித்து அழித்து நிற்பதாக முன்னர்க் கூறினேம். அவருள் ஒரு வீரன் அரசமுடி தரித்துள்ளான். மற்றொருவன் விரித்த தலையுடன் வீழ்ந்துள்ளான். இந்நிலையைக் கூர்ந்து நோக்கின், விசயாலயன் வென்ற காலத்தில் தஞ்சையையும், அதன் பகுதிகளையும் முடிதரித்து ஆண்ட முத்தரைய மன்னன் ஒருவனே என்பதும், அவனுக்குத் துணையாக மற்றொரு பெருவீரனும் இருந்திருக்கிறனென்பதும் தெரிகிறது. இவ்விருவரையும் தனது துணிவினல் வென்றதற்குரிய சின்னமாகவே துர்க்கையின் சிலையமைப்பு ஏற்பட்டுள்ளது. மற்றும் நிசும்பசூதனி என்னும் பெயரும் கொல்லுதலில் தந்திரவெற்றி யுடையளென்னும் சிறப்புடன் இருப்பதால் அப்பெயர் உக்கிரகாளி என்று வழங்கி வருதற்கு இயல்பாகியது போலும்! இவ்வுக்கிரகாளி யம்மன் கோயிலும் தஞ்சையின் எல்லைக்கு மேற்பட்ட இடத்திலிராமல், வடமேற்கு எல்லைக்குட்பட்ட புறமதிலின் வாயிலருகே அமைந்திருந் திருக்கிறதென்பது தெளிவாம். இப்பகுதியைச் சார்ந்த கருவக்காடு என்னும் படுகையைச் சார்ந்து அரசர்களின் நினைவுச் சின்னங் களோடு கூடிய அம்பலமொன்று இருந்து அழிந்திருக்கிறது. இது பற்றிய விளக்கத்தினைப் பின்னர் கூறுதும்.

எனவே விசயாலயன் எடுத்த துர்க்கைக் கோயில், தஞ்சை பலதளிப்பற்று, நந்தவனப்பற்று ஆகியவற்றைச் சார்ந்த இடத்தில் அமைந்துள்ளதும், இன்று உக்கிரகாளி என்று பெயர் கூறப்படுவது மாகிய துர்க்கைக் கோயிலேயாகும். இங்கு சிதலமடைந்த நிலையில் வெளியில் வைத்துள்ளதும், மேலே விளக்கிய சிற்பத்திறன் உள்ளதுமான காளிதேவியின் சிலையை விரைந்து புதைபொருள் ஆராய்ச்சியாளர் கண்டு கண்காணித்தல் நலமாம்.

தஞ்சை, குலாலர் தெருவை அடுத்துள்ள உக்கிரகாளியம்மையின் திருவுருவமும், கோயிலும் விசயாலயன் எடுத்தவை என்பதற்கு யான் தரும் சான்றுகள் :—

1. உக்கிரகாளியென்று பெயர் கூறப்பெறும் துர்க்கையின் திருவுருவ அமைப்பு, பல்லவர்காலச் சுவட்டுடன் கூடிய, பழைய சோழர் காலச் சிற்ப முறையுடன் இலங்குகின்றது.

2. இப்பொழுதுள்ள கோயில் செங்கல் திருப்பணியாகக் காணப் படினும், அடியில் அகழ்ந்து பார்க்கும்போது சிறந்த கற்றளியின் அடிப்படை இருக்கிறது.

3. ஒரு காலத்தில் இக்கோயில் கற்றளியாக இருந்ததென்பதை சிறந்த முறையில் பழமையான பலிபீடமட்டும் எஞ்சியுள்ளதைக் கொண்டு அறிய முடிகிறது.

4. இக்கோயிலைச் சார்ந்த பகுதியில் பெரிய அளவில் கற்றளி யொன்று இருந்து, வடவாற்றின் அழிவால் தரையினுள் மறைந்து கிடக்கின்றது. அதில் விளங்கிய சிற்பங்கள் புதை பொருளாகக் கிடைத்திருக்கின்றன.

5. கல்வெட்டுக்களில் தஞ்சையின் எல்லைப்புற மதில் கூறப்பட் டுள்ள இடத்திற்கு இலக்காகவே இக்கோயில் நந்தவனங்கள் சூழ அமைந்திருக்கின்றன.

6. விசயாலயன் இரண்டு அரசர்களை அழித்த பின்னரே தஞ்சையின் வெற்றியைக் காணமுடிந்ததென்பதற்கு அறிகுறியாக அம்மை யின் திருக்கோலம் உளது.

7. தஞ்சையில் ஒன்பது காளியம்மன் கோயில்கள் இருப்பினும் தஞ்சை புராணம் அசுரர்களை வென்று தஞ்சையைக் காத்துத் தஞ்சாபுரி என்று பெயர் தந்த தெய்வம் உக்கிரகாளி யென்றே கூறுகிறது.

8. நிசும்பசூதனி என்னும் பெயர்ப் பொருளுக்கு இலக்காக உக்கிர காளி என்னும் பெயர் அமைந்துள்ளது.

9. இக்கோயில் தஞ்சை அரசர் கோயில்களுள் ஒன்ருக இருந்து வருவதும், இக்கோயிலின் பழமையை நன்கு உணர்த்துவதாகும்.

மேற்குறித்துள்ள சான்றுகளினுல் சோழன் விசயாலயன் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் எடுத்த நிசும்பசூதனி என்னும் துர்க்கைக் கோயில், இன்று சிதைந்த நிலையில் இருக்கும், தஞ்சைக் குலாலர் தெருவைச் சார்ந்து வடவாற்றின் தென்கரையி லுள்ள உக்கிரகாளியின் கோயிலேயாம் என்பது விளக்கம்.

தமிழ் வாழ்க!

தமிழ்ப் பொழில்

துணர் ௩௫

விகாரி

1959 — 60

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர்:

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

உள்ளுறை.

விகாரி 1959—60	துணர் ௩௫.	மலர் ௧-௧௨ பக்கம்

1. அருணசல நிலையத் திறப்பு விழா 5—63
2. திரு. காமராசர் பேருரை 8
3. அ. கு. வேலன் அவர்களின் நன்றியுரை 12
4. க. த. ச. கல்வி நிலையங்களின் விழா நிகழ்ச்சிகள் 13
5. க. த. ச. 47-ஆம் ஆண்டு விழா 14—61
6. குரல் வினை
   சங்கீதம், ப. சுந்தரேசன், குடந்தை. 17
7. தமிழில் தாவரம்—வேங்கை
   திரு. கு. சீனிவாசன், M. SC., விரிவுரையாளர், (அண்ணமலைநகர்) 21 பிண்டி 59
   ,, ஆம்பல்—செங்கழுநீர் 79. கொன்றை 114
   ,, மாதவி 148. தேமா—புளிமா 195, 275
   கருவிளம்—கூவிளம் 299. கருவிளை—செருவிளை 374
8. முத்தொள்ளாயிரம் — திரு. அடிகளாசிரியர் 27
9. வள்ளுவர் கண்ட அறம்
   வித்துவான், திரு. வி. சச்சிதானந்தம் 33
10. சுந்தரமூர்த்திகள் தேவாரம்
    மயிலை, சீனி. வேங்கடசாமி 39
11. இலியத்
    விரிஞ்சை, மு. பழநி, எம். ஏ., 42, 76, 103
12. தஞ்சையில் தமிழகப் புலவர் குழு
    புலவர், ந. இராமநாதன்
    ,, தி. பாலசுப்பிரமணியன் 46
13. செந்தலையைச் சேர்ந்த கல்வெட்டுகள்
    வித்துவான், சி. கோவிந்தராசன் 55
14. வக்காணம் — சங்கீதம், ப. சுந்தரேசன் 65
15. தமிழகத்தில் பெண் உரிமை
    சாமி. சிதம்பரனர் 68
16. மணிமேகலையில் முரண்பட்ட செய்தியா ?
    மயிலை, சீனி. வேங்கடசாமி 85
17. சிற்றிலக்கியம் (1) காதல்
    மது. ச. விமலானந்தம், எம். ஏ., 92, 105
18. நாவலர், ச. சோ. பாரதி 80-ஆம் ஆண்டு நிறைவு விழா வாழ்த்து 97
19. மதிப்புரை 100, 326
20. கையறவு { க. நல்லமுத்து நாட்டார், க. அண்ணமலைப் பிள்ளை } 102

21. தமிழ்நாட்டுப் பெண்களின் பண்பாடு
சாமி. சிதம்பரனுர் 118
22. ஒரு தொடர்புரை
மயிலை, சீனி. வேங்கடசாமி 128
23. மு. அபிரகாம் பண்டிதர் பிறந்தநாள் நூற்றுண்டு நிறைவு 129
24. தண்டியாசிரியர்
புலவர், ந. விசுவநாதன் 133, 189
25. சடையவர்மன் பராந்தக பாண்டியன் செப்பேடுகள் (கி. பி. 800—900)
S. திருஞானசம்பந்தன், M. A., 137
26. ஆளத்தி — சங்கீதம், ப. சுந்தரேசன் 145
27. தவருன தமிழ் ஆராய்ச்சிகள் (கடிதம்)
பேராசிரியர், அ. கிருட்டினமூர்த்தி, எம். ஏ., பி. எல். 150
28. சிற்றிலக்கியம் (2) ஆற்றுப்படை
மது. ச. விமலானந்தம், எம். ஏ., 152, 279, 308
29. கவிதை
திருவத்திபுரம், வித்துவான், மா. தேவராசன் 157
30. பாரதி—யார்
பேராசிரியர், பண்டித.
P. R. மீனுட்சிசுந்தரம் பிள்ளை, எம். ஏ., (மாசுகோ) 161
31. பத்தினிச் செய்யுளும், கண்ணகியும்
மயிலை, சீனி. வேங்கடசாமி 181, 211
32. திருப்பனந்தாள் திருமடாலயத் தலைவர் தவத்திரு. அருணந்தித் தம்பிரான் அவர்களின் 60-ஆம் ஆண்டு நிறைவு விழா வாழ்த்து 193
33. பழந்தமிழ் நாட்டில் கலை வளர்ச்சி
சாமி. சிதம்பரனுர் 196, 249, 313
34. காட்டாளத்தி
சங்கீதம், ப. சுந்தரேசன் 205
35. விக்கிரம சோழ விண்ணகரம்
வித்துவான், சி. கோவிந்தராசன் 214
36. கலைமகள் விழா (க. த. ச.) 223
37. க. த. ச. 48-ஆம் ஆண்டு விழா 225
38 விழாத் தலைவர் வரவேற்பு வாழ்த்துரை 233
39. பழந் தமிழர் காட்சித் திறன்
K. S. மகாதேவன், M. A., B. Sc., 237
40. நாவலர், ச. சோ. பாரதி. மறைவு 257
41. இரங்கற் கூட்டம் (க. த. ச.) 258
42. பாரதியே! எங்குற்ருய்?
ச. பாலசுந்தரம் 262

43.	பண்டிதர் சவரிராயர் டாக்டர் மா. இராசமாணிக்கனுர்	263
44.	ஆசார்ய போகம் வித்துவான், திரு. அடிகளாசிரியர்	271
45.	சதாசிவ பண்டாரத்தார் மறைவு	289
46.	இரங்கற் கூட்டம் (க. த. ச.)	291
47.	பண்டாரத்தார் கையறுநிலை ச. பாலசுந்தரம்	293
48.	அன்னையின் கனவு வித்துவான், சொ. சிங்காரவேலனுர்	294
49.	நிழல் — தேவராசன், பி. ஏ.,	295
50.	க. த. சங்க நிகழ்ச்சிகள்	296
51.	திருக்கோவையார் வித்துவான், தி. சங்குப் புலவர்	302
52.	வரலாறு கண்ட வரதட்சணை வித்துவான், சி. கோவிந்தராசன்	306
53.	கையறவு { மு. இராகவையங்கார் / அ. பொன்னனண்ணுக் களத்தில்வென்ருர் }	321
54.	எண் எழுத்து ஆராய்ச்சி வித்துவான், தி. சங்குப் புலவர்	323
55.	உலகளந்தான் கோ. சண்முகசுந்தரம், M. A., M. SC.	329
56.	குறமும் குறவஞ்சியும் மது. ச. விமலானந்தம், எம். ஏ.	334
57.	தண்மதியும் தமிழ் மறையும் வித்துவான், வி. சச்சிதானந்தம்	343
58.	கவிதையும், ஒழுக்கமும் ச. அகத்தியலிங்கம், M. A., B. SC.	348
59.	இளங்கோவடிகள் தமிழ்க் கழக 22-ஆம் யாண்டுவிழா	353
60.	கையறவு — (இ. மா. கோபாலகிருட்டினக் கோன்)	356
61.	செவியுணரா ஒலிகள்–I. ச. சம்பத்து, எம். ஏ.,	357
62.	தமிழகத்தின் நெசவுத் தொழில் டாக்டர், மா. இராசமாணிக்கனுர்	361
63.	சொல்லும், செயலும் வித்துவான், வி. சச்சிதானந்தம்	367
64.	விசயாலயன் எடுத்த துர்க்கைக் கோயில் வித்துவான், சி. கோவிந்தராசன்	377

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER

"THE TAMIL POZHIL"

(MONTHLY)

FORM IV

Rule 8 of the Press and Registration of Books Act, 1867.

1. *Place of Publication* : Thanjavur.
2. *Periodicity of its Publication* : Monthly.
3. *Printer's Name* : Sri N. Chinniah, for T.V.M. Mahalingam Mahalingam Press.
   Nationality : Indian.
   Address : 1321, South Rampart, Thanjavur.
4. *Publisher's Name* : S. Swayamprakasam, B. A., B. L.,
   Nationality : Indian.
   Address : Karanthai Tamil Sangam, Karuntattamkudi, Thanjavur.
5. *Editor's Name* : S. Swayamprakasam, B. A., B. L.,
   Nationality : Indian.
   Address : President, Karanthai Tamil Sangam, Karuntattamkudi, Thanjavur.
6. *Names and address of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.* } KARANTHAI TAMIL SANGAM, THANJAVUR.

I, S. Swayamprakasam, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 21—3—60.

S. SWAYAMPRAKASAM,
Signature of Publisher.

Regd. No. M. 4192.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்.

யாழ் நூல்—(விபுலானந்த அடிகள்) தடித்த தாள் ரூ.	...	18—00
தொல்–சொல்—தெய்வச்சிலையார் உரை	...	2—50
நெல்லை வருக்கக் கோவை	...	0—12
சித்தரந்தாதி	...	0—12
சுருதி வீணை	...	0—25
தமிழரசி குறவஞ்சி	...	0—62
பரத சாத்திரம்	...	1—00
கவியரசு நினைவு மலர்	...	1—00
சிவமும் செந்தமிழும்	...	0—25
சிலப்பதிகாரம் — புகார்க் காண்டம்	...	0—50
Garland of Tamil Poetry	...	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	...	0—50
அப்பர் புகழ்மாலை	...	0—25
சுந்தரர் புகழ்மாலை	...	0—25
பாரதசார வெண்பா	...	1—00
தொல்–பொதுப்பாயிரம் உரை	...	0—12
யவன மஞ்சரி (த. இராமநாத பிள்ளை B. A., யாழ்ப்பாணம்)		1—50
இந்தியத் தலயாத்திரை (T. B. தாஸ் ராவ் B. A.,)	...	1—25
புலவராற்றுப்படை (அமிர்தம் சுந்தரநாத பிள்ளை)	...	0—25
கட்டுரைப் பொழில் (அ. மு. சரவண முதலியார்)	...	2—50
தமிழ்ப் பொழில் துணர்கள் 1, 4, 5, 6, 8, 29, 31, 32, 34, துணர் ஒன்றுக்கு (12 மலர்கள்)	...	4—00

'கரந்தைக் கட்டுரைக் கோவை'

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு.

சென்னைப் பல்கலைக் கழக (Pre-University) முன்னிலைப் பல்கலைக் கழகத் தேர்விற்குப் பாடமாக வைக்கப்பெற்றுள்ளது.

விலைக்குக் கிடைக்கும். விலை 1—75.

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

		உள்நாடு.	மலேயா, இலங்கை முதலிய வெளிநாடுகள்.
முன்பணம் ஆயுள் வரி	ரூ.	50 00	50 00
,, ஆண்டு வரி சங்க உறுப்பினர்க்கும் தலைமையாசிரியர் ஒப்பம்பெற்ற தனிப்பட்ட மாணவர்க்கும்		2 00	2 50
,, ,, ஏனையோருக்கு		3 00	3 50

Edited and Published by S. Swayamprakasam, B. A., B. L., Karanthai Tamil Sangam, Tanjore. Printed by N. Chinniah for T.V.M. Mahalingam at Mahalingam Power Press, 1321, South Rampart, Tanjore.